**இலங்கை போக்குவரத்து சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை போக்குவரத்து சபையின் ''சபை'' 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சபையின் நிதிக்கூற்றுக்களானது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக பாதகமான அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 (LKAS 01) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்து கணக்குகளுக்குமாக முன்னைய காலப்பகுதி சம்பந்தமான ஒப்பீட்டு கணக்கு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 21 மற்றும் 22 ஆகச் சமர்ப்பிக்கப்பட்ட முறையே சாரதிப் பயிற்சி பாடசாலை மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான இலாப நட்ட கணக்குகளுக்கான ஒப்பீட்டு கணக்கு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2005 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபை என மாற்றப்பட்ட இணைத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து இன்றுவரை எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் ஆகிய பிரிவுகளுக்காக இலாபத்தை தனித்தனியாக கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் இப்பிரிவுகள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்கான ஒப்பீட்டுத் தகவல்கள் விபரமான வருமானக் கூற்றில் இரண்டு ஆண்டுகள் தொடர்பாகவும் காட்டப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒப்பீட்டு ரீதியான கணக்கு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 (LKAS 01) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் மற்றும் நட்டம் குறிப்பிடத்தக்க அளவு | நியாயத் தீர்ப்பு தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளும் இன்றுவரை கொடுப்பனவு செய்து முடிவடைந்திருக்காததனால் இது தொடர்பாக செலுத்த | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நாணயமாற்று நட்டம் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகமாக இருக்குமாயின் கணக்கில் தனியாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யாமைக்கு எதிராக வழங்குனர் கம்பனியால் தாக்கல் செய்யப்பட்ட மத்தியஸ்த வழக்கின் காரணமாக வழங்குனருக்கு செலுத்த வேண்டியிருந்த பணம் மற்றும் வட்டி தொடர்பான டொலர் பெறுமதியானது மத்தியஸ்த தீர்ப்பின் பிரகாரம் மத்தியஸ்த தீர்ப்பு வெளியிடப்பட்ட 2019 மே 09 ஆந் திகதிய கட்டயையின் பிரகாரம் தீர்த்து வைக்காமையின் அடிப்படையில் மற்றும் அப்பணம் 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டதன் காரணமாக ரூபா பெறுமதிக் குறைப்பின் அடிப்படையில் குறைப்புச் செய்த பெறுமதியாக வழங்குனருக்கு மிகையாகச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 462,892,919 பணம் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டியிருந்த முழுப்பணத்தையும் இலங்கை ரூபாவில் தீர்மானித்தலில் சிக்கல் காணப்பட்டது. எனவே இக்கொடுப்பனவு நடவடிக்கையை தீர்த்துவைத்ததன் பின்னர் அது தொடர்பான செம்மையாக்கல்களை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் (LKAS 07) 35 ஆம் பிரிவின் பிரகாரம் வரிகளிலிருந்து உருவாகிய பணம் காசுப் பாய்ச்சல் கூற்றில் தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 145,000,000 வரிப் பெறுமதியானது காசுப் பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பங்கிலாபம் செலுத்தியதன் பின்னரான இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் இப்பங்கிலாபக் கொடுப்பனவு காசுப் பாயச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வரி அல்லது பங்கிலாபம் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் (LKAS 07) 20 (09) ஆம் பிரிவின் பிரகாரம் சுழற்சி முறையில் காசுப் பாயச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது உரிய காலப்பகுதியில் தொழிற்படு மூலதனத்தில் மாற்றமாக இருப்பின், பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் | இந்த பிழையான செலுத்த வேண்டிய பெறுமதியானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபையின் கணக்குத் தொகுதியினுள் சரிசெய்யப்பட்டுள்ளது. இந்த செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்துவைத்தலானது ஒரு நிதிச் செயற்பாடு அல்லது | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களை பிழையாக தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் செம்மையாக்குதல் செய்யப்படாதிருப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றங்கள் மாத்திரம் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் நடைமுறையற்ற பொறுப்பின் கீழ் பிழையாகக் கணக்கீடு செய்யப்பட்ட மீதியான ரூபா 1,860,824,837 மீதியினை ஏடுகளிலிருந்து நீக்கும் போது அந்த மீதி காசுப் பாய்சச்ல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் பிழையாக செம்மையாக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நடைமுறை ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் குறைவடைந்திருந்தது. | முதலீட்டுச் செயற்பாடு அல்லாததுடன் ஒரு செயற்பாட்டு நடவடிக்கையாக எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். | வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 (LKAS 16) இன் 73 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வினைத்திறனான ஆயுட் காலம் அல்லது பெறுமானத் தேய்வு சதவீத்தினை இறுதிக் கணக்கு குறிப்புக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் நடைமுறை ஆண்டின் போது கணனி மென்பொருட்கள் 33.33 சதவீத்தில் ரூபா 3,275,225 பெறுமதிக்கு, டிக்கட் இயந்திரங்கள் 25 சதவீத்தில் ரூபா 5,192,034 பெறுமதிக்கு, குளிரூட்டி இயந்திரங்கள் 10 சதவீதத்தில் ரூபா 1,676,088 பெறுமதிக்கு மற்றும் ஏனைய சொத்துக்கள் 10 சதவீத்தில் ரூபா 5,362,939 பெறுமதிக்கு பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சதவீதங்களானது இறுதிக் கணக்கு கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | டிக்கட் இயந்திரம், கணனி என்பவற்றிற்கான பெறுமானத் தேய்வு கொள்கைக்குள் உள்ளடக்கப்படுவதுடன் ஏனைய சொத்துக்கள், குளிரூட்டி இயந்திரங்கள், அலுவலக உபகரணங்களும் இயந்திரங்களும் முதலியன இயந்திரங்களின் கீழ் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பெறுமானத் தேய்வு கொள்கைகளானது கணக்கு குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 (LKAS 16 ) இன் 07 ஆம் பிரிவின் பிரகாரம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயத்தை ஒரு சொத்தாக இனங்காண்பதாக இருந்தால் அச்சொத்தின் எதிர்கால பொருளாதார நலன் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு உருவாகக் கூடிய | 2005-10-19 ஆந் திகதிய 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபை அதிகாரச் சட்டத்தின் மூலம் அனைத்து சேவை நிலையங்கள் மற்றும் கம்பனிகளை ஒருங்கிணைத்து இலங்கை போக்குவரத்துச் சபை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டியதுடன் சரியான சொத்துக்கள் பட்டோலை |

| | | | |
|---|---|---|---|
| | இயலுமை காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,367,754,792 தொகையான பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததான உடைந்த பஸ்கள் மற்றும் ரூபா 1,041,195 தொகையான பயன்படுத்த முடியாததாக உடைந்த ஏனைய வாகனங்கள் இன்னும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவை சம்பந்தமான பட்டோலையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீதிகளானது 2005-10-18 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்ட ஒன்றித்த கணக்குகளில் விபரிக்கப்பட்டுள்ள நீண்ட காலமாகச் காணப்படுகின்ற சொத்து மீதியாகும். | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 (LKAS 16) இன் 37 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொகுதியாக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 75,842,984 பெறுமதியான சொத்துக்களின் தொகுதி இனங்காணப்படாத ஏனைய சொத்துக்களின் மீதி காணப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்ட அச்சொத்துக்களுக்குரிய கிரயம், திரண்ட பெறுமானத் தேய்வு, வருடாந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதி, தேறிய பெறுமதி என்பன தனியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏனைய சொத்துக்களின் மீதியினுள் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னைய மீதிகளைப் போல 2016 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்து தனித்தனியாக இனங்காணக்கூடிய சொத்துக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் பின்னர் அனைத்து சொத்துக்களும் தனித்தனியாக இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கு முன்னைய மீதியை தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியாதுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொகுதியாக்கப்பட்டு சொத்துக்களின் கிரயம், திரண்ட பெறுமானத் தேய்வு, வருடாந்த பெறுமானத் தேய்வு, தேறிய பெறுமதி என்பன தனியாக காட்டப்படுதல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 (LKAS 16) இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தாக இனங்காணப்பட்டதன் பின்னர் அச்சொத்தின் ஆயுள் காலத்தினுள் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் நட்டம் கழிக்கப்பட்டதன் பின்னர் மேற்கூறிய சொத்தின் நியாயப் பெறுமதியை நம்பகரமாக அளவீடு செய்யக்கூடியதாக இருக்கையில் அச்சொத்தினை ஒரு விடயமாக அல்லது ஒரு தொகுதியாக மீண்டும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். எனினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையிடமுள்ள ரூபா 1,000 தேறிய பெறுமதியான 2,715 | இந்த பஸ்களின் பெறுமதி ரூபா 1,000 ஆக நீண்டகாலமாக பதியப்பட்டிருந்ததானது அவை சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படாது வைத்திருப்பதற்காகவாகும். எவ்வாறாயினும் LKAS 16 இலுள்ள தொடர் இலக்கம் 36 இன் பிரகாரம் உரிய சொத்துக்களை மிள்மதிப்புச் செய்வதற்காக முழுமையான சொத்துக்கள் வகுதியும் மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டியதுடன் பஸ்களை மீள்மதிப்புச் செய்வதற்காக அதிக | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்கள் சரியாக மீள்மதிப்புச் செய்து பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பஸ்கள், குத்தகை அடிப்படையில் பெற்ற 2,586 பஸ்கள் மற்றும் 1,305 இன்ஜின்கள் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தும் அந்த பஸ்களில் 83 சதவீதமானவை தற்பொழுதும் செயற்பட்டு வருவதனால் செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்களின் இயலளவுப் பெறுமதி மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அளவான காலமும் அதே போல அதற்காக அதிக செலவும் டிசெய்ய வேண்டி ஏற்படும். | |
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 (LKAS 18) இன் பிரகாரம் சேவை வழங்குதல் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான வருமானத்தை நம்பகரமாக அளவீடு செய்யக்கூடியதாக இருக்குமாகவிருந்தால் மற்றும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பொருளாதார நலன்கள் காணப்படுகின்றது எனவும் அவை நிறுவனத்திற்குள் பாச்சப்படுகையில் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் கொடுக்கல் வாங்கலினை முடிவு செய்யும் கட்டத்தினை நம்பகரமாக அளவீடு செய்யக்கூடியதாக இருப்பதன் பிரகாரம் தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யக்கூடியதாக இருந்த போதிலும் அசோக் லேலன்ட் கம்பனியின் பஸ்களை ஈடுபடுத்தி அதிவேகப் பாதைகளில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பயண வழிகளை நிறைவேற்றுவதன் மூலம் 2023 ஆம் ஆண்டின் போது வீதி ஆவண வருமானமாகச் சேகரிக்கப்பட்ட ரூபா 1,019,797,453 பணம் மற்றும் விசேட சுற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்காக உழைத்த ரூபா 7,499,648 வருமானமாக மொத்தமாக ரூபா 1,027,297,101 பணம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கின்ற நாளாந்த வருமானம் ''வாடகை பஸ் வருமான கணக்கிற்கு'' எரிபொருள், மிகையூதியம், ஊழியர் வேதனம், உடன்படிக்கை கட்டணம் வாடகை பஸ் வருமான கணக்கிற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும். அக்கணக்கின் தேறிய பெறுமதி 85% மற்றும் 15% ஆக பஸ் உரிமையாளர்களுக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குமிடையே பங்கிடப்படும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய 15% அளவானது வாடகை பஸ் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 17 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | கணக்கீட:டு நியமங்களுக்கு இணங்க உழைத்த வீதி ஆவண வருமானமானது மிளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஒ) | இலங்க கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 (LKAS 19) இன் பிரகாரம் ஓய்வூதிய பிரதிபலன் கணக்கினை வைத்திருக்கும் போது பணிக்கொடை | LKAS 19 இன் பிரகாரம் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்தல் இடம்பெறுகின்றது. 2005 ஆம் ஆண்டிலிருந்து | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திட்டமிடல் பொறுப்பிற்குரிய அட்டுறு வட்டியும் காப்பீட்டு இலாபமும் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கினை வைத்திருப்பதற்காக விபரிக்கப்பட்ட பிரதி பலன் திட்டத்திற்கு இணங்க நிகழ்கால சேவைக் கிரயம் மற்றும் பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் நிகழ்கால பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான திட்டமிடல் பொறுப்புக்கள் (Plan Liabitity) கணக்கின் மீதிக்கு அட்டுறு வட்டியாகிய ரூபா 1,037,220,225 தொகை மாற்றும் காப்பீட்டு இலாபமான (Actuarial Gain) ரூபா 90,742,519 தொகை மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த இரண்டு பெறுமதிகளின் தேறிய பெறுமதியாகிய ரூபா 946,477,706 தொகை ஓய்வூதிய பிரதிபலன் பற்றாக்குறையாக ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் பிழையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக ஒரு நிதியத்தினை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. முதலீட்டு நடவடிக்கை இடம்பெறாதுள்ள பின்னணியில் 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதியின் அடிப்படையில் அட்டுறு வட்டியினை கணிப்பீடு செய்தலினையும் அதற்காக ஒதுக்கீடு செய்தலினையும் செய்ய முடியாதுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டில் அனைத்து டிப்போக்களையும் உள்ளடக்கும் வகையில் அனைத்து டிப்போக்களினாலும் சேகரிக்கப்பட்ட நாளாந்த வருமானத்தில் ரூபா 20,000 இலிருந்து ரூபா 30,000 வரையான பணம் பணிக்கொடை கொடுப்பனவுக்கான நிதியத்திற்கு செலவு வைத்து ரூபா 916,047,510 பணம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் பணிக்கொடை கொடுப்பனவிற்காக ரூபா 1,114,698,800 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 (LKAS 19) இற்கு இணங்க திட்ட சொத்துக்கள் (Plan Assets) தொடர்பான சொத்தின் நியாயப் பெறுமதி (FV) நிகழ்கால பெறுமதி (PV) நடைமுறை சேவை கிரயம் (Current Service Cost) மற்றும் காப்பீட்டு இலாபம் (Actuarial Gain) என்பவற்றை பிரதிபலன் திட்டத்திற்கு இணங்க | இலங்கை போக்குவரத்துச் சபையில் பணிக்கொடை நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டின் இறுதிவரை ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவானது ஓய்வூதியச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிகராரம் ஒரு மாதத்திற்குள் செலுத்தப்படாத சந்தர்ப்பம் உள்ளது என பாரிய அதிக எண்ணிக்கையில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதானது மிகவும் சிறிய அளவில் மாத்திரமாகும். இதற்கிணங்க மிகைக் கட்டணம் செலுத்துதல் மற்றும் மிகைக் கட்டணத்தை வேண்டி தொடுக்கப்படுகின்ற வழக்குகள் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திட்ட சொத்துக்களை சரியாக இணங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் உழைக்கின்ற வட்டியும் காப்பீட்டு இலாபமும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| | இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்படவில்லை. | தவிர்க்கப்பட்டுள்ளன. | |
| (ஔ) | இலங்க கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 (2) இன் பிரகாரம் அரசாங்க மானிய பிற்போட்ட வருமானம் அல்லது அரசாங்க மானியமாக இனங்கண்ட சொத்தின் பயன்படுத்தும் ஆயுட்காலத்தினை அடிப்படையாகக் கொண்டு தர்க்கரீதியான அல்லது ஒழுங்குமுறையான அடிப்படையில் காலக்கழிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக இந்திய கடன் மானியத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் உள்நாட்டு நிதியமாக பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 5,513,325,424 தொகை பிற்போட்ட வருமானமாக அல்லது அரசாங்க மானியமாக கணக்கீடு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்தின் பயன்படுத்துகின்ற ஆயுட் காலமான 08 ஆண்டுகளை அடிப்படயாகக் கொண்டு காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதியில் ரூபா 218,260,298 தொகை மீளாய்வாண்டிற்கான விபரமான வருமானக் கூற்றில் ஒரு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காண்டு தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட பஸ்களின் கிரயமானது கணக்காய்வு ஐய வினாவில் கூட்டிக்காட்டப்பட்ட ரூபா 7,875,574,424 அல்லாது இலங்கை போக்குவரத்துச் சபையினால் கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 5,513,996,941.02 ஆகும். அது பற்றி போக்குவரத்து அமைச்சின் பிரதம கணக்காளரினால் 2024/05/17 ஆந் திகதியிடப்பட்ட NT/04/09/CT/176/Vol - V ஆம் இலக்க கடித்தின் ஒரு பிரதி கணக்காய்வு அத்தியட்சகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அரசாங்க மானியத்தினை இனங்கண்டு ஆயுட்காலத்தின் அடிப்படையில் காலக்கழிவு செய்யப்படுதல் வேண்டும். |
| (க) | இலங்க கணக்கீட்டு நியமம் இலக்கம் 36 (LKAS 36) இன் பிரகாரம் கடந்த கால சம்பவத்தின் பெறுபேறாக சபைக்கு சட்டரீதியான கடப்பாடு காணப்படுமாயின் அக்கடப்பாட்டினை தீர்த்துவைக்கும் வகையில் பணம் வெளிச்செல்வதனால் மற்றும் அக்கடப்பாட்டின் அளவு மதிப்பீடு செய்யப்பட்டிருக்குமாயின் அப்பணம் நிகழத்தக்க பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வீதி விபத்துக்களின் காரணமாக இழப்பீடாக செலுத்த வேண்டிய ரூபா 2,075,449,378 பணம் மீளாய்வாண்டிற்கான கணக்கு கூற்றுக்களில் ஒரு நிகழத்தக்க | ஒரு பொறுப்பின் கடந்த கால சம்பவத்தின் பெறுபேறாக நிகழ்காலத்தில் ஒரு கடப்பாடு இருத்தலானது அக்கடப்பாட்டினை தீர்த்துவைக்கும் போது தொழில் முயற்சியின் வளங்கள் வெளியே செல்லுதல், கடப்பாடு தொடர்பான நம்பகரமான ஒரு மதிப்பீட்டினை செய்யக்கூடியதாக இருத்தல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு இனங்காண முடியாததனால் வீதி விபத்துக்களின் காரணமாக செலுத்த வேண்டிய இழப்பீடாக ரூபா 2,075,449,378 தொகை | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்பினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | |
| (கா) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 36 (LKAS 36) இன் பிரகாரம் பொருளாதார பிரதிபலன் அல்லது சேவைத் திறன்கள் உட்பாய்ச்சப்படுதல் சாத்தியமாகுகையில் சபையனினால் அறிக்கையிடப்படும் திகதியில் காணப்பட்ட நிகழத்தக்க சொத்துக்களின் தன்மையின் சுருக்கமான விபரம் மற்றும் நிதித் தாக்கத்தின் மதிப்பீடு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் தற்பொழுது சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள 2015 ஆம் ஆண்டில் சனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் சனாதிபதி அவர்களின் பிரச்சார கூட்டத்திற்காக பங்குபற்றிய மக்களை ஏற்றிச் செல்வதற்காக வழங்கிய இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்காக கிடைக்க வேண்டிய நிலுவைப் பணமாகிய 142,523,600 தொகை மற்றும் 2023 யூன் 26 ஆந் திகதி நியாயதீர்ப்பு கட்டளைக்கு இணங்க ஒரு தனியார் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்காக நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 236,569,639 பணச் சொத்து கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 42 டிப்போக்களினால் சனாதிபதித் தேர்தலுக்காக பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய கணக்கு நடவடிக்கைகள் அந்த டிப்போக்களினால் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கை கணக்கீட்டு நியமம் இக்கம் LKAS 36 இன் கீழ் காட்டப்பட்டுள்ளதானது நிகழதக்க பெறுப்புக்கள் அல்லாது கட்புலனாகாத சொத்தாகும். ஒரு தனியார் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்களுக்காக நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட வேண்டிய பணம் 2023 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சபையினால் அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (கி) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 (LKAS 38) இன் பிரகாரம் ரூபா 36,426,972 கிரயமான கணனி மென்பொருள் தொடக்க அடையாளம் காணலின் பின்னர் கிரயத்திலிருந்து திரண்ட காலக்கழிவு மற்றும் நட்டத்தை கழித்து கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 செப்தெம்பர் 08 மற்றும் 2020 சனவரி 13 ஆந் திகதிகளில் கொள்வனவு செய்த முறையே ரூபா 3,012,277 மற்றும் ரூபா 2,321,105 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருள் | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. 2024-01-31 ஆந் திகதி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கட்புலனாகாத சொத்துக்கள் எதிர்பார்த்த ஆயுட்காலத்தின் பிரகாரம் காலக்கழிவு செய்து கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முறைமையானது எதிர்பார்த்த ஆயுட்காலத்திற்கு இணங்க காலக்கழிவு செய்யப்படாது பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதனால் இந்த இரண்டு மென்பொருட்களின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 959,661 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (கீ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 (LKAS 38) இன் 21 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சொத்துக்கு அர்ப்பணிப்புச் செய்யக்கூடிய எதிர்கால பொருளாதார நலன் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சக்கூடிய வாய்ப்பு உள்ளது என மற்றும் சொத்துக்களின் கிரயத்தை நம்பகரமாக அளவீடு செய்யக்கூடிய சந்தர்ப்பத்தின் போது மாத்திரம் கட்புலனாகாத சொத்துக்கள் இனங்காணப்பட வேண்டிய போதிலும் தேசிய முற்கொடுப்பனவு அட்டை முறையை அமுல்ப்படுத்துவதற்காக ERP மென்பொருள் முறைமையை கொள்வனவு செய்வதற்காக 2022 மார்ச் மாதத்தின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,500,000 பெறுமதி செலுத்தப்படாதிருந்த போதிலும் கணனி மென்பெருள் கணக்கிற்கு உள்ளடக்கி மீளாய்வாண்டின் போது ரூபா 499,950 தொகைக்கு பெறுமானத் தேய்வு செய்ததன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் அத்தொகையால் குறைவடைந்திருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. 2024-01-31 ஆந் திகதி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க சொத்துக்களின் கிரயம் நம்பகரமாக அளவீடு செய்யக்கூடிய சந்தர்ப்பத்தில் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்து பெறுமானத் தேய்வு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது படிவம் ரீதியான கட்டமைப்பின் பிரகாரம் சொத்துக்கள் அல்லது வருமானம் அதிக அளவில் வெளிப்படுத்தல் செய்யப்படாதிருத்தல் மற்றும் | இம்முறைமையின் பிரகாரம் உரிய கம்பனியின் பஸ்களிலிருந்து கிடைக்கின்ற நாளாந்த வருமானம் ‘‘வாடகை பஸ் | மீளாய்வாண்டிற்கான வருமானம் செலவு முறைப்படியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களைத் |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்கள் அல்லது செலவுகள் குறைத்துக் காட்டப்படாதிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அசோக் லேலன்ட் கம்பனிக்குச் சொந்தமான அதிசொகுசு பஸ்களை அதிவேக வீதியில் ஓட்டுவதன் காரணமாக உழைத்த வீதிப் பதிவேட்டு வருமானத்தில் செலவாகக் கழித்த ரூபா 647,383,565 செலவுகள் அசோக் லேலன்ட் கம்பனிக்கு இலாபமாகச் செலுத்திய ரூபா 347,621,164 மற்றும் மேற்கூறிய கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 40,118,601 தொகையாக மொத்தமாக ரூபா 1,035,123,330 தொகை மற்றும் விசேட சுற்றுப் பயணத்திற்காக சபையின் பஸ்களுக்குப் பதிலாக லங்கா அசோக் லேலன்ட் கம்பனியின் பஸ்களை ஈடுபடுத்தி உழைத்த வருமானத்தில் அசோக் லேலன்ட் கம்பனிக்கு இலாபமாகச் செலுத்திய ரூபா 3,999,228 தொகை மற்றும் செலவாகச் செலுத்திய ரூபா 3,446,420 தொகையாக மொத்தமாக ரூபா 7,445,648 தொகை இறுதிக் கணக்குகளில் செலவு மற்றும் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | வருமான கணக்கிற்கு'' செலவு வைக்கப்பட வேண்டியதுடன் எரிபொருள், மிகையூதியம், ஊழியர் வேதனம், உடன்படிக்கை கட்டணம் என்பன வாடகை பஸ் வருமான கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். அக்கணக்கின் தேறிய பெறுமதி 85% மற்றும் 15% ஆக பஸ் உரிமையளருக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குமிடையே பகிரப்படும். இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய 15% அளவானது வர்டகை பஸ் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | தயாரிக்கும் போது ஆழ்ந்த அறிவுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பட்டோலையின் பிரகாரம் பஸ்களின் கிரம் ரூபா 15,183,719,274 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்குகளில் அது ரூபா 17,465,573,721 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் பஸ்களின் கிரயம் ரூபா 2,281,854,447 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் 2014 யூலை 25 ஆந் திகதி கொள்வனவு செய்த ரூபா 4,816,758 கிரயமான 54 ஆசனங்களைக் கொண்ட பஸ்ஸின் பெறுமதி ஆதனம், பொறி மற்றும் உபகரண பட்டோலையினுள் உள்ளடக்கப்படாததனால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதி அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். | சொத்தக்கள் பதிவேட்டின் பிரகாரம் பட்டோலையினைத் தயாரித்து அதற்கிணங்க இறுதிக் கணக்கு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சமர்ப்பித்த ஆதனம், பொறி மற்றும் உபகரண பட்டோலையிலுள்ள பஸ்களை தவிர்த்து 06 சொத்து விடயங்கள் தொடர்பான மீதியை இறுதிக் கணக்கில் குறிப்பிட்ட சொத்துக்கள் மீதியுடன் ஒப்பீடு செய்த போது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி ரூபா 406,356,901 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிப்பிரிவினால் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கிய பட்டோலைக்கும் இறுதிக் கணக்கிற்கும் இடையிலான வித்தியாசத்தினை செம்மையாக்குகையில் அது ரூபா 406,356,901 ஆக இருந்தது. | சொத்தக்கள் பதிவேட்டின் பிரகாரம் பட்டோலையினைத் தயாரித்து அதற்கிணங்க இறுதிக் கணக்கு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | இந்திய கடன் உடன்படிக்கையின் கீழ் 32 ஆசனங்களைக் கொண்ட 500 பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்திய எக்ஸிம் வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அமெரிக்க டொலர் 15.03 மில்லியனில் பயன்படுத்தப்பட்ட அமெரிக்க டொலர் 13,331,250 இற்குரிய ரூபா பெறுமதி மற்றும் பஸ்களை நாட்டிற்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட பண்டசாலை கட்டணம் உள்ளடங்கலாக பஸ்களை நிகழ்கால நிலைமைக்கு மாற்றும்வரை மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,513,325.424 கிரயத்திற்கும் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5,513,996,941 தொகைக்குமிடையேயான வித்தியாசமாகிய ரூபா 671,517 தொகை மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் மூலதனச் சொத்துக்களாக அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த 500 பஸ்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் போக்குவரத்து அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. எனவே இச்சொத்துக்களை மூலதனமாக்குவதற்காக அக்கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் போக்குவரத்து அமைச்சின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் உரிய சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த 500 பஸ்கள் தொடர்பாக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5,513,998,941.02 ஆகும். | சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | ஆதனம், பொறி மற்றும் உபகரண பட்டோலைக்கு இணங்க கட்டிடங்கள் மற்றும் பஸ்களுக்காக மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வுப் பெறுமதி முறையே ரூபா 60,479,551 மற்றும் ரூபா 878,395,273 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்கில் அது ரூபா 59,791,800 மற்றும் ரூபா 874,811,245 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மிளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வுப் பெறுமதி முறையே ரூபா 687,751 மற்றும் ரூபா | இலங்கை போக்குவரத்துச் சபையினால் இதுவரை பேணப்பட்டு வருகின்ற சொத்துக்கள் பதிவேடு 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் இணங்க தயாரித்தல் இடம்பெற்றுள்ளது. அவ்வாறு பிரிவு மட்டத்தில் தயாரிக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள தரவுகளை பொழிப்பாக்கும் போது | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை சரியாக இனங்கண்டு சரியான பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3,584,028 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரண மீதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இத்தவறு இடம்பெற்றுள்ளது. | |
| (உ) | 2023 ஆம் ஆண்டில் இராணுவப் படை மற்றும் விமானப் படை போக்குவரத்து அனுமதிப்பத்திர வருமானக் கணக்கில் முன்னைய ஆண்டு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தமாக ரூபா 35,361,791 தொகை கடன்பட்டோர் மீதிக்கு எதிரீடு செய்யப்படாது மீளாய்வாண்டிற்கான பெறுவனவுகளாக பதிவு செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறை ஆண்டின் வருமானம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான கடன்பட்டோர் மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யும் போது உரிய தவறு இடம்பெற்றுள்ளது. | மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திர வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | ஊவா பிரதேசத்தைச் சேர்நத தனமல்வில டிப்போவினால் எரிபொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக முற்பணமாக 2023 திசெம்பர் 05 ஆந் திகதி வழங்கப்பட்ட பெறுமதி ரூபா 2,138,829 வீதமான 02 காசோலைகளின் பெறுமதியான ரூபா 4,277,658 தொகையானது மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் கடன்கொடுத்தோர் மீதியில் ஒரு வரவு மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் முற்பண மீதியும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறு ஏற்படாத வகையில் பொறுப்புடன் நடவடிக்கை எடுக்குமாறு நிதி உதவியாளருக்கு எழுத்துமூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்வதற்காக முற்பணத்தை வழங்கும் பிழையானதுடன் செலுத்தப்பட்ட முற்பணத்தை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | மஹரகம டிப்போவினால் மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டிற்கான இறுதித் திகதியில் உள்ளவாறான வங்கி மீதியின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீதி ரூபா 75,684,839 ஆக இருந்த போதிலும் இறுதித் கணக்குகளில் அது ரூபா 79,964,948 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக மீதி ரூபா 4,280,109 | அத்தவறு 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மீதி என மஹரகம டிப்போவிற்காக நியமிக்கப்பட்ட புதிய உதவி முகாமையாளரினால் (நிதி) கூறப்பட்டது. | காசு மீதி குறைவடைந்திருந்தமைக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அதற்குப் பொறுப்பான நபருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | தனமல்வில டிப்போவினால் மக்கள் வங்கியில் பேணப்பட்ட சேமிப்புக் கணக்கின் மீதியினை உறுதிப்படுத்தலின் பிரகாரம் இறுதி மீதி ரூபா 375,044 சாதகமான மீதி காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் அது பாதகமான மீதியாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக இறுதிக் கணக்குகளில் காட்டப்படுகின்ற சேமிப்புக் கணக்கின் மீதி இரண்டு மடங்காக அதாவது ரூபா 750,088 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. இத்தவறு இடம்பெற்றுள்ளதானது வரவுவைக்க வேண்டிய பெறுமதியாகிய ரூபா 375,044.00 தொகை தவறுதலாக செலவு வைத்ததனாலாகும். | வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து பிழையாக கணக்கு வைத்தலினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | கிழக்கு பிராந்திய அலுவலகத்தில் மற்றும் மட்டக்களப்பு டிப்போவில் பேணப்பட்டு வருகின்ற 05 கணக்கு மீதிகளின் ரூபா 759,227 தொகையான வரவு மீதியும் ரூபா 4,585,117 தொகையான மேலதிகப்பற்று மீதியும் மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் வங்கி நடைமுறைக் கணக்கு மீதியாகக் காட்டப்பட்டிருந்தும் அந்த மீதியானது பிழையான கணக்குப் பதிவின் காரணமாக இடம்பெற்ற பிழையான மீதி என்பதனால் இறுதிக் கணக்குகளில் சரியான காசு மீதி ரூபா 3,825,890 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. கிழக்கு பிராந்தியத்திற்குரிய 05 வங்கி கணக்குகளின் தகவல்களை 2018 ஆம் ஆண்டின் போது கணக்கீட்டு பக்கேஜ்ஜில் உள்ளடக்கும் போது இத்தவறு இடம்பெற்றுள்ளது. தற்பொழுது இந்த வங்கி கணக்குகள் செயற்படுத்தப்படாததுடன் இதற்குரிய செம்மையாக்கல்களை மேற்கொண்டு சரிசெய்யுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிழையான காசு மீதி தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பொறுப்பான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | பதுளை, மஹியங்னை, கெப்பட்டிபொல, மூதூர் மற்றும் காத்தான்குடி டிப்போக்களில் பேணப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்கு கணக்குகளின் காசுக் கணக்கின் பிரகாரம் காணப்பட வேண்டிய மேலதிகப்பற்று மீதி இறுதிக் கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டதன் காரணமாக மீய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள | பதுளை டிப்போவினால் இத்தவறு மேற்கொள்ளப்பட்டது என ஏற்றுக்கொள்கிறேன். மஹியங்கனை டிப்போ, கெப்பட்டிபொல டிப்போ மற்றும் காத்தான்குடி டிப்போக்களினால் இப்பிழை மேற்கொள்ளப்பட்டது என ஏற்றுக்கொள்கிறேன். | மேலதிகப்பற்று மீதி தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகப்பற்று மீதி ரூபா 14,789,142 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | மன்னார் டிப்போ, மஹரகம டிப்போ மற்றும் மத்திய பஸ் அலுவலகத்தினால் பேணப்பட்டு வரும் நடைமுறைக் கணக்குகளில் காசேட்டின் பிரகாரம் காணப்பட வேண்டிய மேலதிகப்பற்று மீதி இறுதிக் கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மேலதிகப் பற்று மீதி ரூபா 6,453,619 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மன்னார் டிப்போவினால் 2024 ஆம் ஆண்டின் சனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட ஒரு கொடுப்பனவு 2023 திசெம்பர் மாதம் காசேட்டில் பதியப்பட்டிருந்ததன் காரணமாக இத்தவறு இடம்பெற்றுள்ளது. மஹரகம டிப்போவும் கணக்குவைக்கும் போது இத்தவறினை மேற்கொண்டுள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். | மேலதிகப் பற்று மீதி தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் நடைமுறைக் கணக்கின் வரவு மீதி ரூபா 566,252,078 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்குகளில் அது ரூபா 1,082,572,294 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் இறுதிக் கணக்கு மீதி ரூபா 516,320,216 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பரீட்சை மீதியின் பிரகாரம் நடைமுறைக் கணக்குகளிலுள்ள மீதிகளுக்கும் இறுதிக் கணக்குகளிலுள்ள மீதிகளுக்குமிடையே எந்த வித்தியாசமும் இல்லை என தெரிவிக்கிறேன். | வரவு மீதி வித்தியாசம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | சபையின் டிப்போக்கள் பிராந்திய அலுவலகங்கள், பிராந்திய வேலைத்தளங்கள், சாரதி பயிற்சி கல்லூரி என்பவற்றின் மூலம் பேணப்படுகின்ற நிலையான வைப்புக்கள் சம்பந்தமாக உரிய நிதி நிறுவனங்களினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்காக வழங்கப்பட்ட நேரடி மீதிகளின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 நிலையான வைப்புக் கணக்குகளில் ரூபா 740,984,457 தொகையான மீதி காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் அவை ரூபா 724,572,282 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நிலையான வைப்பு மீதி ரூபா 16,412,175 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. உரிய மஹரகம நபரின் தவறினால் இப்பிழை ஏற்பட்டுள்ளதுடன் உரிய உதவி முகாமையாளர் (நிதி) மற்றுமொரு டிப்போவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். | இது தொடர்பாக விரிவாக புலனாய்வு செய்து பொறுப்பான நபருக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இப்பற்றாக்குறை மீதியினுள் மஹரகம டிப்போவின் மூலம் மஹரகம மக்கள் வங்கியினால் பேணப்பட்டுவரும் ரூபா 15,000,000 நிலையான வைப்பும் இருந்தது. | | |
| (கா) | சபையிடமிருந்த ரூபா 740,484,457 பெறுமதியான நிலையான வைப்புக்களில் 57 வைப்புக்களுக்காக மிளாய்வாண்டிற்கான அட்டுறு வட்டியான ரூபா 34,889,365 தொகை அட்டுறு வட்டி வருமானமாக மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஆண்டிற்கான வருமானம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். | நிலையான வைப்பு மீதியை சரியாக கணக்கீடு செய்து அட்டுறு வட்டியினை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கி) | 2023 திசெம்பர் 31 இல் முடியவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு ரீதியான கணக்கு கூற்றின் நிருவாகச் செலவு மீதியில் பணிக்கொடைக் கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 937,486,487 மீதியானது மீளாய்வாண்டிற்கான ஒப்பீட்டு ரீதியான நிதிக்கூற்றில் நிருவாகச் செலவுகளில் குறைத்து காட்டப்பட்டிருந்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டிற்கான திரண்ட இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாற ரூபா 937,486,487 தொகையின் காரணமாக 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்ட இாபத்தில் குறைவு ஏற்பட்டிருக்கவில்லை. பணிக்கொடைக்கான ஒதுக்கீடு 2023-12-31 ஆந் திகதியிலிருந்து சரியான கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க திருத்தம் செய்ததன் காரணமாக இச்செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டதாகும். | கணக்கு மீதியினை சரியாக இனங்கண்டு சரியான செலவுத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கீ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பீட்டு ரீதியான காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான இலாபமாக சுட்டிக்காட்டப்பட்ட மீதி ரூபா 484,219,604 ஆக இருந்த போதிலும் ஒப்பீட:டு ரீதியான விபரமான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்த இலாபம் ரூபா 1,421,706,096 ஆகும். அதற்கிணங்க திருத்திய விபரமான வருமானக் கூற்றில் இலாபமாக காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கும் முன்னைய ஆண்டிற்கான இலாபத்திற்குமிடையேயான | 2022-2-31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட விபரமான வருமானக் கூற்றிற்கு இணங்க ரூபா 484,219,601 இலாபம் சுட்டிக்காட்டப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 2022 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கலின் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான இலாபம் ரூபா 1,421,706,090 ஆகும். | பிழையான காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்காமை சம்பந்தமாகப் பரீட்சித்து பொறுப்பான நபருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாசமான ரூபா 937,486,492 பெறுமதியின் காரணமாக மீளாய்வாண்டிற்கான திரண்ட நிதியத்தின் வரவு மீதி அத்தொகையால் குறைவடைந்திருந்தது. | | |
| (கு) | மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றில் வருமானத்திற்கு எதிராக இனங்காணப்பட்ட வருடாந்த பெறுமானத் தேய்வுத் தொகை ரூபா 1,025,070,377 ஆக இருந்த போதிலும் சபையினால் சுழற்சி முறையில் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் வரிக்குப் பின்னைய இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்த பெறுமானத் தேய்வுத் தொகை ரூபா 906.605,923 ஆக இருந்ததனால் வருடாந்த பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 118,464,414 குறைத்து செம்மையாக்கப்பட்டிருந்தது. | கூட்டிக்காட்டப்பட்டுள்ள பெறுமானத் தேய்வுத் தொகையானது ரூபா 1,025,070,337 ஆக இருந்த போதிலும் அவற்றில் ரூபா 118,464,414 பெறுமதியானது முன்னைய ஆண்டிற்குரிய பெறுமதியானதுடன் அது மற்றும் ரூபா 906,605,923 தொகயையான நடைமுறை ஆண்டிற்கான பெறுமானத் தேய்வுப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறுமானத் தேய்வாக உள்ளடக்கப்பட்டள்ளது. | பெறுமானத் தேய்வுப் பெறுமதியினை சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்காமைக் கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து காசு மற்றும் காசுக்கு சமமான மீதிகளுக்கான தாக்கத்தை சரிசெய்தல் வேண்டும். |
| (கூ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களின் பெறுமதியான ரூபா 892,145,839 மீதியானது மிளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னைய இலாபத்திற்கு பிழையாக செம்மையாக்கப்பட்டிருந்ததனால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சலானது அப்பெறுமதியால் அதிகரித்திருந்தது. | உரிய தவறு இடம்டபெற்றுள்ளது. முன்னைய ஆண்டிற்கான கணக்கின் செம்மையாக்கல் கணக்கின் மீதியினை தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வரிக்கு முன்னைய இலாபத்திற்கு பிழையாக செம்மையாக்கி தேறிய காசுப் பாய்ச்சலினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக பரீட்சித்து உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கெ) | மீளாய்வாண்டின் போது உதிரிப்பாகங்கள் மற்றும் எரிபொருள் இருப்பின் மிகைப் பெறுமதியான ரூபாா 6,544,593 தொகை முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் கணக்கீடு செய்ததன் மூலம் உரிய காலப் பகுதியில் முதலீட்டு செயற்பாடுகளழலருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் அதிகரித்திருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. அடுத்துவரும் ஆண்டுகளின் போது காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இத்தவறினை சரிசெய்தல் இடம்பெறும். | மிகை இருப்பு பெறுமதியினை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கே) | ஸ்டீல் இம்பெக்ஸ் என்ட் இன்டஸ்ரீஸ் கம்பனியால் 2019 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட இணக்கசபை வழக்குத் தீர்ப்பு தொடர்பாக பத்து நபர்களைக்கொண்ட மீளாய்வுச் சபையின் மூலம் ஏகல களஞ்சியத்திலுள்ள பொருட்கள் மீளாய்வு செய்தல் இடம்பெற்றிருந்ததுடன் 2019 நவம்பர் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வுச் சபை அறிக்கைக்கு இணங்க மேற்கூறிய கம்பனியின் ஏகல களஞ்சியத்தில் இருந்த பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மற்றும் மீள் ஏற்றுமதிக்கு இருந்த இருப்புக்களின் பெறுமதி அமெரிக்க டொலர் 874,593 ஆகும். அந்த இருப்புக்களில் ரூபா பெறுமதியானது அத்திகதியில் உள்ளவாறான இருப்புக்கள் பெறுமதியிடப்பட்ட டொலரின் பெறுமதியான ரூபா 181.38 இற்கு இணங்க ரூபா 158,633,738 ஆக இருந்ததுடன் அப்பணத்தை மீளாய்வாண்டிற்கான கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வனாவின் மூலம் கூட்டிக்காட்டப்பட்டுள்ள ஐ.அ.கு டொலர் 874,593 மீதியினுள் மீள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய பொருட்களின் பெறுமதியான ஐ.அ.கு டொலர் 519,984 உள்ளடக்கப்பட்டுள்ளது. | இருப்பு மீதிகளை சரியாக கணக்குகளில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (கொ) | இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நாளாந்த இருப்பு மற்றும் விற்பனை அறிக்கைகளின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட எரிபொருள் இருப்பின் பெறுமதி ரூபா 453,925,605 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் எரிபொருள் விற்பனை வருமானமாக ரூபா 453,047,652 மாத்திரம் கணகீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 877,953 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மூலம் பேணப்பட்டு வருகின்ற நாளாந்த விற்பனை பேரேட்டின் முழு மொத்தத்திற்கும் பேரேட்டு கணக்கிற்குமிடையே வித்தியாசம் காணப்பட்டது. | எரிபொருள் விற்பனை வருமானத்தினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கோ) | பிற்போட்ட வருமானமாக அல்லது அரசாங்க மானியமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய | அவ்வாறான தவறு இடம்பெற்றிருக்கவில்லை. உரிய செம்மையாக்கல் | பிற்போட்ட வருமானத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | பற்றாக்குறையான பிற்போட்ட வருமானம் அல்லது அரசாங்க மானிய பணத்தில் மீளாய்வாண்டிற்கான காலக்கழிவினை கழித்ததன் பின்னர் கிடைக்கின்ற ரூபா 71,261,572 தேறிய தொகை மீளாய்வாண்டிற்கான பிற்போட்ட வருமானம் அல்லது அரசாங்க மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காலக்கழிவினை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கை) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் ஒப்பீட்டு ரீதியான கூற்றில் 2022 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான திரண்ட நிதிய மீதியாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 24,993,653,069 தொகையான வரவு மீதி மீளாய்வாண்டிற்கான கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான கூற்றில் ரூபா 19,115,858,531 வரவு மீதியாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் தொடக்க திகதியில் காட்டப்பட்டுள்ள திரண்ட நிதியத்தின் வரவு மீதி ரூபா 5,877,794,538 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூபா 24,993,653,069 தொகையான திரண்ட இலாப மீதி 2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்றில் 2022-12-31 ஆந் திகதியில் காணப்பட்ட மீதியாகும். 2022 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்களின் காரணமாக 2023-12-31 ஆந் திகதியில் காணப்பட்ட திரண்ட இலாப நட்ட கணக்கின் மீதி ரூபா 19,115,858,531 ஆகும். | கணக்கு மீதியை சரியாக இனங்கண்டு பற்றாக்குறை வரவு மீதியை சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (கௌ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான விபரமான வருமானக் கூற்றில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பணிக்கொடைக்கான ஒதுக்கீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,687,941 தொகையான பணிக்கொடைக்கான மிகை ஒதுக்கீடு ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானங்களின் மொத்தம் அத்தொகையால் அதிகரித்தக் | 2023 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் (LKAS) 19 இன் பிரகாரம் பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டிற்காக கணக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேலுள்ள கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிட்ட சமப்பாட்டினைப் பயன்படுத்தி (SRn மற்றும் MSRn) பணிக்கொடை நிதியத்திற்கான ஒதுக்கீட்டிற்காக கணிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | பிழையான செம்மையாக்கல் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்தின் வரவு மீதி அத்தொயையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ச) | பஸ் அணியினை அதிகரித்தல், நிறுவன ரீதியான அபிவிருத்தி மற்றும் இயலளவினை மேம்படுத்துவதற்கு இன்ஜின் தொகுதியை கொள்வனவு யெ்தல் என்பவற்றிற்காக சபைக்கு விடய இலக்கம் 117-2-27-1-2201 இன் மூலம் மூலதன செலவு விடயத்தின் கீழ் ரூபா 2,000 மில்லியன் மீளாய்வாண்டிற்காக பொதுத் திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய பணத்தில் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 916,360,000 ஆக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளில் அது ரூபா 881,620,000 ஆக புனரமைப்பு மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 34,740,000 பணம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கையை தயாரிக்கும் போது இத்தவறு இடம்பெற்றுள்ளது. 2023 ஆம் ஆண்டின் போது லக்திவ பொறியியல் கம்பனியிடமிருந்து பஸ்களை திருத்தம் செய்வதற்காக அந்த நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்த ரூபா 34,740,000 பணம் நேரடியாக போக்குவரத்து அமைச்சின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | வருடாந்த நிதி ஏற்பாட்டினை சரியாக முகாமைத்துவம் செய்து செலவு செய்யப்பட்ட பணத்தை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (சா) | அமெரிக்க டொலர் 318 மில்லியன் கடன் வரிசையின் மிகுதியாக இருந்த நிதியத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு 600 பஸ்கள் கொள்வனவு செய்யும் செயற்பாட்டிற்காக 117-2-27-3-2101-0/17 ஆம் இலக்க செலவுத் தலைப்பின் கீழ் உள்நாட்டுச் செலவுகளை மீளளிப்பதற்காக திறைசேரியின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 770 மில்லியனில் மீளாய்வாண்டிற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 690,774,614 பணத்தில் பஸ்களை கொள்வனவு செய்வதற்கான அரசாங்க மானியமாக கணக்கீடு செய்யப்பட்ட பணம் ரூபா 470,905,380 ஆகும். இதற்கிணங்க ரூபா 219,869,234 தொகையான அரசாங்க மானியம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 777 மில்லியன் பணம் மற்றும் மிளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டுள்ள ரூபா 690,774,614.00 பணம் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூபா 470,509,380.00 பணத்தில் விளக்கமளிக்கப்படுவதாவது 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கிடைத்த அரசாங்க மானியம் 2023 ஆம் ஆண்டின் போது காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதியாகும். | வருடாந்த நிதி ஏற்பாட்டினை சரியாக முகாமைத்துவம் செய்து செலவு செய்யப்பட்ட பணத்தை சரியாக காலக்கழிவு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (சி) | மீளாய்வாண்டிற்காக பொதுத் திறைசேரியின் மூலம் பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவகால அனுமதிப்பத்திரங்களை மீளளிப்புச் செய்வதற்காக சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து கிடைத்த ரூபா 270 மில்லியன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 270 மில்லியன் பணம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கிடைத்திருக்காததுடன் பொதுத் திறைசேரியின் ஆலோசனையின் அடிப்படையில் 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான உள்நாட்டு செலவினை தீர்த்துவைப்பதற்கு உரிய செலவுத் தலைப்பிற்கு மாற்றப்பட்டது. | அரசாங்கத்திடமிருந் து கிடைத்த நிதி ஏற்பாட்டினை சரியாக உரிய செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்து மூல சான்று இல்லாமை

| | விடயம் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத் தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | செயற்படுத்தப்படாத கணக்குகள் | 1,290,782,782 | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக விபரமான பட்டோலை | இக்கணக்காய்வு ஐய விாவில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்களை அடுத்துவரும் கணக்காய்வுகளின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | லங்கா அசோக் லேலன்ட் நிறுவனத்தின் பங்குகளுக்கான முதலீடு | 23,406,250 | பங்குச் சான்றிதழ் மற்றும் சந்தைப் பெறுமதியை கணிப்பீடு செய்வது தொடர்பான விபரம் | இக்கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்களை அடுத:துவரும் கணக்காய்வின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய மீதியை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஊழியர் பங்கு மூலதனம் | 190,302,122 | பங்குச் சான்றிதழ் மற்றும் உரிமை மூலதனம் தொடர்பான பட்டோலை | இக்கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவ | உரிய மீதியை சரியாக இனங்கண்டு கணக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தற்காக தேவையான ஆவணங்களை அடுத்துவரும் கணக்காய்வின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வழிக் காசு | 51,291,031 | விபரமான பட்டோலை மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துதல் கடிதம் | இக்கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்களை அடுத்துவரும் கணக்காய்வின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய மீதியை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| இந்திய கடன் மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பஸ்களின் நாளாந்த வருமானத்தில் ரூபா 5,500 தொகை நாளாந்தம் பிராந்திய அலுவலகத்தினூடாக தலைமை அலுவலகத்தின் கணக்கிற்கு மாற்றி ஒரு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பொதுத் திறைசேரியின் அல்லது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்நிதியம் ரூபா 443,065,080 இனால் அதிகரித்திருந்ததுடன் இது இறுதிக் கணக்குகளில் தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது இந்திய கடன் உதவியின் கீழ் 500 பஸ்கள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தன. இதற்கான கொடுப்பனவு பொதுத்திறைசேரியின் மூலம் செய்யப்படுவதுடன் கூட்டு விருப்புக் கூற்று சம்பந்தமான கலந்துரையாடலின் போது வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம் இந்நிதி சேகரிக்கப்பட்டள்ளது. | நிதியத்தை ஸ்தாபித்தல் முறைப்படியாக இருக்க வேண்டியதுடன் அதற்காக அமைச்சரவை மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.6 செயற்பாடற்ற கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள பல | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. இம்மீதிகள் நிதி அறிக்கைகளில் | இம்மீதிகளை சரியாக இனங்கண்டு வருமானத்திற்கு |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளாக செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறாத ரூபா 6,221,004 பெறுமதியினைக் கொண்ட காப்புறுதி ஒதுக்கம், தொழிலாளர் இழப்பீட்டு ஒதுக்கம், மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் மற்றும் பயண அனுமதிப்பத்திர நிதியம் என்பனவாக 04 மீதிகள் காணப்பட்டன. | முன்பிலிருந்து காணப்பட்டு வரும் மீதிகளாகும். | செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.7 பொருத்தமற்ற வகையில் கணிப்பீடு செய்தல் அல்லது மதிப்பீடு செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முகையூதிடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்காகத் தயாரித்த கணக்குகளில் திருத்திய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அட்டுறு செலவு மீதிக்குள் மிகையூதிடத்திற்கான ஒதுக்கீடாக ரூபா 82,500,000 தொகை காட்டப்பட்டிருந்தது. | 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறான மிகையூதிட ஒதுக்கீடு 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையற்ற பொறுப்பின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய பெறுமதியாக விபரிக்கப்பட்டுள்ளது. | மிகையூதிட கொடுப்பனவினை நோக்கமாகக் கொண்ட செம்மையாக்கலின் காரணமாக அது பற்றி பரீட்சித்துப்பார்த்து உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பஸ் தயாரிப்பு தொடர்பான 2020 இன் 03 ஆம் இலக்க நிதிப் பிரிவு சுற்றறிக்கையின் மூலம் உத்தேசிக்கப்பட்ட ஊக்குவிப்பு படி முறைமையினுள் பகுதியளவில் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்களுக்காக ஊக்குவிப்பு படியினை செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் முழுமையான ஒரு பஸ்ஸின் பொடி பாகத்தினை தயாரிக்கும் காலப்பகுதியும் நிர்ணயிக்கப்பட்ட ஊக்குவிப்பு படி மதிப்பீட்டு முறைமை மற்றும் மாதாந்தம் தயாரிக்கப்பட வேண்டிய கண்டிப்பான வரம்பும் ஊக்குவிப்புபடி வரம்பு கூற்றறிக்கையின் மூலம் காட்டப்பட்டிருக்காதிருந்தும் மீளாய்வாண்டில் ஊக்குவிப்பு படியாக ரூபா 19,247,995 செலுத்தப்பட்டிருந்தது. | 2020 இன் 03 ஆம் இலக்க சுற்றறிகையின் மூலம் உத்தேசிக்கப்பட்ட ஊக்குவிப்பு படி முறைமையினுள் ஒரு பஸ்ஸின் பொடியினை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முடிவு செய்யும் வரையான காலப்பகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் டிப்போவிற்கு ஒப்படைக்கும் வரையான காலப்பகுதி நிர்ணயிக்கப்படவில்லை. | ஊக்குவிப்பு படி வரம்பு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிப்பின் அடிப்படையில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சபையின் மத்திய பஸ் தரிப்பிடத்திலுள்ள 8,228 சதுர | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. இது | அறவிட வேண்டிய வாடகை |

| | | | |
|---|---|---|---|
| | அடி பரப்பளவினைக் கொண்ட ஒரு கட்டிடம் வருடாந்தம் உடன்படிக்கை புதுப்பிக்கப்படாதும் முறையாக மதிப்பீடு செய்யப்படாதும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய நிலுவைப் பணமாகிய ரூபா 4,000,000 தொகை மற்றும் 2017 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 பெப்ரவரி 08 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய ரூபா 26,560,560 தொகையான நிலுவைப் பணமாக மொத்தமாக ரூபா 30,560,560 தொகை கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து சரிசெய்தல் மேற்கொள்ளப்படும். | வருமானத்தினை சரியாக இனங்கண்டு வருதமானத்திற்கு எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சிசு செரிய, நிசி செரிய மற்றும் கெம் செரிய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மீளளிப்புச் செய்வதற்காக அரசாங்கத்தினால் செலுத்தப்படுகின்ற பணம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு சபையினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விலைப் பட்டியல்களுக்கு இணங்க செலுத்தப்பட வேண்டிய போதிலும் போக்குவரத்து ஆணைக்குழுவினால் பஸ் ஓடுவதற்காக பிராந்திய அலுவலகங்களுக்கு (ருகுணு பிராந்திய அலுவலகத்தினைத் தவர்த்து) 2023 ஆம் ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய நிலுவை மீதிகளான முறையே ரூபா 135,429,430, ரூபா 11,716,992 மற்றும் ரூபா 112,949 ஆக மொத்தமாக ரூபா 147,259,371 தொகை 2023 திம்பெர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சிசு செரிய மற்றும் நிதி செரிய தொடர்பான பணம் போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் பெற்றுக்கொள்வதற்காக டிப்போவின் மூலம் சமரப்பிக்கப்படுகின்ற அறிக்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யும் போது வேண்டிக்கொள்ளப்படுகின்ற பணத்திற்கும் செலுத்தப்படுகின்ற பணத்திற்குமிடையே வித்தியாசம் காணப்பட்டது. | பெறவேண்டிய பணத்தை சரியாக இனங்கண்டு வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | கொவிட் காலப்பகுதியின் போது 09 பிராந்தியங்களில் வைத்தியசாலை ஆளணியினரை ஏற்றிச் செல்வதற்காக 2020 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் | மத்திய அரசாங்கத்தின் வைத்தியசாலைகள் மற்றும் மாகாண சபைகளின் வைத்தியசாலைகளுக்கு | ஆளணியினர் போக்குவரத்து கட்டணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு வரை சபையின் பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 151,585,764 பணம் அறவிட வேண்டியிருந்தது. உரிய சேவை வழங்கி 02 ஆண்டுகள் கடந்திருந்தும் இப்பணத்தினை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | இலங்கை போக்குவரத்து சபையினால் வழங்கப்பட்டுள்ள பஸ்களுக்காக இன்னும் கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கிடைக்க வேண்டிய நடத்துனர் நிலுவைப் பண மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,168,805 மீதியினுள் பல ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்பட்டு வரும் ரூபா 4,753,550 பணம் காணப்பட்டதுடன் அப்பணத்தில் சேவையை விட்டுச் சென்ற மற்றும் வெளிநாடு சென்ற நபர்களிடமிருந்து மீள அறவீடு செய்ய முடியாத ரூபா 328,242 பணம் மற்றும் இரத்மலானை டிப்போவில் விபரத்தை தேடிக் கண்டு பிடிக்க முடியாத ரூபா 6,363 மீதி காணப்பட்டது. | உரிய மீதிகள், அடிக்கடி நிதி அறிக்கைகளில் காட்டப்படுகின்றது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். இதில் குறிப்பிட்ட பணம் தொடர்பான பல நடத்துனர்கள் சேவையை கைவிட்டு, மரணமடைந்து மற்றும் தெரிவிக்காது வெளிடு சென்றுள்ளதனால் இப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதுள்ளது. | பரீட்சித்துப் பார்த்து நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கிடைக்க வேண்டிய இராணுவ வாடகை வருமானமாக கணக்கீடு யெய்யப்பட்ட ரூபா 70,658,623 மீதியினுள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 64,907,313 மீதி காணப்பட்டதுடன் நிண்டகாலமாக ஏடுகளில் காட்டப்படுகின்ற இந்த வருமான மீதியை அறவீடு செய்வதற்கு அல்லது ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இராணுவத்தின் வாடகைப் பயணத்திற்கான பஸ்களுக்காக கிடைக்க வேண்டிய பணம் தொடர்பாக இன்வொயிஸ் தயாரித்து உரிய நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் கணக்கு வைக்கும் நடவடிக்கை தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியை சரியாக இனங்கண்டு மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதியான ரூபா 91,281,307 பெறுமதியினுள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 25,431,648 மீதியும் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 48,493,282 மீதியும் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 2,550,136 மீதியும் காலப் | இம்மீதிகள் நிதி அறிக்கைகளில் நீண்டகாலமாக காணப்பட்டு வரும் மீதிகளாகும். இவற்றினை உறுதிப்படுத்துவதற்காக எந்த இயலுமையும் இல்லாததுடன் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க இம்மீதிகள் தொடர்பாக எடுக்க | கிடைக்க வேண்டிய காலங்கடந்த மீதிகளை சரியாக இனங்கண்டு அறவீடு செய்தல் அல்லது அதற்காக ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுப்பாய்வில் இனங்காணப்படாத ரூபா 10,092,048 மீதியும் காணப்பட்டது. அந்த பெறவேண்டிய மீதிகளுக்காக மீளாய்வாண்டின் போது ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் சம்பந்தமாக உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. | |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வணிகக் கடன்கொடுத்தோர் மீதியில் 02 பிராந்திய அலுவலகங்கள் மற்றும் 19 டிப்போக்களினால் பிரதான டயர் வழங்குனருக்கும் இரண்டு உதிரிப்பாகங்களை வழங்குபவர்களுக்கும் செலுத்த வேண்டிய 05 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ரூபா 382,156,975 தீத்துவைக்கப்படாத கடன் மீதியானது பிழையான கணக்கு பதிவுகள் என அவதானிக்கப்பட்டதனால் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மீதிகள் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக காணப்பட்டு வரும் மீதியானதுடன் மேற்கூறிய மீதி கணக்கீட்டு பிழை மற்றும் தவறின் காரணமாக உருவாகியுள்ளது. | கடன்கொடுத்தோர் மீதிக்காக மீதிகளின் உறுதிப்படுத்தலினைப் பெற்று மீதிகளை இனங்கண்டு வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2,712,682,543 தொகையான செலுத்த வேண்டிய மீதியினுள் ஊழியர் சம்பளத்திலிருந்து கழித்து மூன்றாந் தரப்பினரான சங்கங்கள், கம்பனிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உள்ளடங்கலாக 05 நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 109,516,143 தொகை மற்றும் 27 கணக்கு விடயங்கள் தொடர்பான இரண்டு ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,603,166,400 தொகையான கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்டதுடன் அது பிழையான கணக்கு பதிவு என அவதானிக்கப்பட்டதனால் | இம்மீதிகள் நிதி அறிக்கைகளில் நீண்ட காலமாக காணப்பட்டு வரும் மீதியாகும். 2005 இலிருந்து 2017 வரையான காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையில் காணப்பட்ட நிதி சிக்கலின் காரணமாக வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது டிப்போ மட்டத்தில் கொடுப்னவு செய்வதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் வழங்கலினை தொடர்ச்சியாக பேணுவதற்காக உரிய வவுச்சர்கள் தலைமை அலுவலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு | இம்மீதிகள் உள்ளபடியாக செலுத்த வேண்டிய மீதிகளா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக மீதிகளின் உறுதிப்படுத்தலினைப் பெற்று கணக்கீட்டு தவறாயின் வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இந்த மீதிகளில் ரூபா 1,078,029,266 தொகை 10 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதியாகும். | செய்யப்பட்டன. | |

**1.6.3 முற்பணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வணிக மற்றும் ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 91,281,308 தொகையான மீதியினுள் கொழும்பு பிராந்திய அலுவலகத்தின் கெஸ்பேவ டிப்போவின் மத்திய பஸ் அலுவலகத்தின் மற்றும் மீதொடமுல்ல டிப்போவின் அறவிட வேண்டிய தரப்பினர்களை உறுதியாக இனங்கண்டு கொள்ளாது முறையே ரூபா 721,611, ரூபா 27,762, ரூபா 17,399,614, ரூபா 165,270 என்பனவாக மொத்தப் பெறுமதியான ரூபா 18,314,257 தொகையும் டிப்போக்களின் மூலம் ஏனைய டிப்போக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களிலிருந்து கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 28,810,742 தொகையும் மாத்தளை பிராந்திய வேலைத்தளத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 499,166 தொகை மற்றும் மூன்று டிப்போக்கள் உழைக்கும் போதே செலுத்தும் வரியாக ரூபா 327,283 மீதியும் அவதானிக்கப்பட்டதுடன் அந்த மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்டுள்ள கொழும்பு பிராந்திய அலுவலகத்தின் ரூபா 721,611 பணம், கெஸ்பேவ டிப்போவின் ரூபா 27,762 பணம், மீதொட முல்ல டிப்போவின் ரூபா 165,270 பணம், மத்திய பஸ் அலுவலகத்தின் என்பதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 17,399,614 பணம் என்பன நீண்ட காலமாக காணப்பட்டு வரும் மீதி என்பதுடன் இந்த கிடைக்க வேண்டிய மீதிகள் சம்பந்தமாக எந்த தரப்பினரையும் ஆவணங்களையும் தேடிக் கண்டு பிடிப்பதற்கு முடியாதுள்ளது. | இனங்கண்டு கொள்ள முடியாத மீதிகளை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஐயக்கடனுக்காக ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டியதுடன் இனங்கண்டு மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியினுள் உள்ளடக்கப்பட்ட தலைமை அலுவலகத்தினால் பேணப்பட்டு வருகின்ற 21 கணக்குகள் தொடர்பாக ரூபா 1,611,808,399 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மற்றும் 04 கணக்குகள் தொடர்பான ரூபா | இப்பெறுமதியில் நீண்டகாலமாக தொடர்ச்சியாகக் காணப்பட்டு வரும் சில மீதிகள் காணப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக மூன்றாந் தரப்புக் கொடுப்பனவாக சம்பளத்திலிருந்து அறவீடு செய்யப்பட்டுள்ள | இக்கணக்கு மீதிகளை சரியாக இனங்கண்டு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தி வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

126,777,337 தொகைக்கான மீதி உள்ளது. அட்டுறு செலவுகள் என்பனவாக மொத்தமாக ரூபா 1,738,585,736 தொகைக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 105 | நட்டங்கள் சேதங்கள் சம்பந்தமாக அறவிடக்கூடிய உச்ச அளவு பெறுமதியும் அறவிட வேண்டிய பணமும் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,041,195 கிரயமான சேதமடைந்த மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக மேற்கூறிய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2022 மே 09 ஆந் திகதி இடம்பெற்ற கலவர சம்பவத்தின் போது சேதமடைந்த பஸ்கள் மற்றும் வாகனங்களின் பெறுமதியான ரூபா 12,136,724 தொகை சம்பந்தமாகவும் நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுகப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபா 12,136,724 சரியானதாகும். இந்த நட்டத்தை தற்பொழுது வரை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததானது அந்த நடவடிக்கை தொடர்பாக இடம்பெறுகின்ற புலனாய்வு நடவடிக்கை இன்னும் முடிவடைந்திருக்கவில்லை என்பதனாலாகும். | நட்டங்கள் சேதங்களை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்லத் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 177 | அரசாங்க வருமானத்தின் ஒரு பகுதியாக அல்லது அவ்வாறு இல்லையாயின் தமக்கு கிடைக்கின்ற முழுப்பணமும் நாளாந்தம் அல்லது முடியுமான அளவிற்கு விரைவாக அனுப்பிவைத்து அப்பணத்திற்கு பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளுதலானது அரசாங்கத்திற்கான | 2023-05-01 ஆந் திகதியிலிருந்து 2023-05-31 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப் பட்ட வீதி வருமானம், கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்ட பணத்துடன் ஒப்பிடப்பட்டது. | கிடைக்கின்ற வருமானத்தை நாளாந்தம் கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எப்பணமாக இருந்த போதிலும் பெற்றுக்கொள்ளும் அனைத்து சேகரிக்கின்ற உத்தியோகத்தர்களின் கடமையாக இருந்தும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 2023 மே மாதத்தின் போது கட்டுபெத்த அதிசெகுசு சுற்றுலா போக்குவரத்து சேவையின் மூலம் பஸ்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 4,257,900 பெறுமதியான பஸ்களின் நாளாந்த வருமானம் 1 - 3 நாட்களுக்கு மேல் தாமதித்து வங்கியில் வைப்பு செய்யப்பட்டது. | ஒவ்வொரு நாளும் கிடைக்கின்ற வருமானத்தை முறைப்படியாக வங்கியில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துடன் அவ்வாறு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு சில பஸ்களின் வருமானத்தினை வங்கியில் வைப்புச் செய்வதில் தாமத்தினை ஏற்றுக்கொள்கிறேன். | |
| (iii) | நிதிப்பிரணமாம் 208 (ஈ) | உரிய கணக்கீட்டு உத்தியோகத்தரின் முன் அங்கீகாரமின்றி வருடாந்தம் ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு உரிய செயற்பாட்டிற்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பஸ்களை புனரமைப்புச் செய்வதற்காக வழங்கிய ரூபா 34,740,000 வரிப்பணம் முறையான அங்கீகாரமின்றி ஏனைய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்டு ள்ளவாறு தேசிய பாதீட்டில் பங்குடமையாளர் களுக்கு இழப்பீட்டுப் பணத்தை செலுத்துவதற்கு வழங்கிய பணமாக வழங்கப்பட்டுள்ள ரூபா 8,981,180 தொகை ஏனைய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படவில் லை | அரசாங்கத்தி ன் நிதி ஏற்பாடு உரிய செயற்பாட்டிற் காக மாத்திரம் ஈடுபடுத்துவதற் கான பொறுப்பினை ஏற்றுக்கொள் ளுதல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரணமாம் 387 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுப்பனவுகளுக்குமாக தமது வங்கி மீதி போதுமானதா என கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரினால் தொடர்ச்சியாக ஆராய்ந்து பார்க்க வேண்டியதுடன் எந்த அரசாங்கத்தின் வங்கி கணக்கிலும் மேலதிகப் பற்றினைப் பெற்றுக்கொள்ளுதல் தடைசெய்யப்பட்டிருந்த | கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்ட வாறு 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 548,969,542 பணம் காசேட்டின் பிரகாரம் மேலதிகப்பற்றாகு ம். அவ்வாறு மேலதிகப் பற்று உருவாகுவதற்கு காரணமாவது ஒரு | நிதிப்பிரமாண ங்களக்கு இணங்கிய வகையில் மேலதிகப்பற்றி னை பேணுவதற்கு முடியுமான வகையில் மாத்திரம் முயற்சி எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் சபையினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 548,969,542 தொகையான மேலதிகப் பற்று பேணப்பட்டிருந்ததுடன் அதற்காக மேலதிகப் பற்று வட்டியாக மீளாய்வாண்டின் போது ரூபா 907,131 செலுத்தப்பட்டிருந்தது. | பவுஸருக்காக செலுத்தப்படுகின்ற காசேலையின் பெறுமதி ரூபா 2.5 மில்லியனுக்கு அண்மித்துள்ளமையும் அடுத்த நாள் வருமானத்தில் அக்காசேலையின் பெறுமதியை உள்ளடக்கும் எதிர்பார்ப்பில் எரிபொருளினை பெற்றுக்கொள்வதினாலுமாகும். | |
| (v) | நிதிப்பிரமாணம் 595 (இ) | ஒரு வங்கி கணக்கினை வைத்திருக்கும் அனைத்து நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை சம்பந்தமாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முனன்னர் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் வரவு மீதிப் பெறுமதி ரூபா 525,443,654 தொகையான 10 நடைமுறைக் கணக்குகளின் மற்றும் ரூபா 9,794,929 தொகையான மேலதிகப் பற்று மீதியுடனான ஒரு நடைமுறைக் கணக்கின் வங்கி கணக்கிணக்க கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டியலில் குறிப்பிட்ட 02 கணக்குகள் சேமிப்பு கணக்குகளானதுடன் அக்கணக்குகளுக்காக வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கும் தேவைப்பாடு இருக்கவில்லை. | நாளதுவரையாக வங்கி கணக்கிணக்க கூற்றினை தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (vi) | நிதிப்பிரணமாம் 395 (ஈ) | 2023 திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் வழங்கிய எனினும் கொடுப்பனவுக்கச் சமர்பபிக்கப்படாத ரூபா 19,247,645 தொகை தொடர்பாக 05 டிப்போக்கள் மற்றும் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலைய்ங்களின் பணமாக்கப்படாத காசோலைகள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் | நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களைச் சமர்ப்பிக்கும் போது இத்தகவல்களை உள்ளடக்குமாறு அனைத்து பிரிவுகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | பணமாக்கப்படாத காசேலைகள் தொடர்பான விபரம் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (vii) | நிதிப்பிரமாணம் 395 (உ) | 2023 திசெம்பர் மாத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றுக்களுடன் வைப்புச் செய்த எனினும் தேறப்படாத காசேலைகளின் ஒரு பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 4,050,546 பெறுமதியினைக் கொண்ட 03 டிப்போக்கள் மற்றும் இரத்மலானை நிரப்பு நிலையத்தின் வைப்பு செய்த எனினும் தேறப்படாத காசேலைகள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களைச் சமர்ப்பிக்கும் போது இத்தகவல்களை உள்ளடக்குமாறு அனைத்து பிரிவுகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வைப்புச் செய்த எனினும் தேறப்படாத காசேலைகள் தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (viii) | நிதிப்பிரமாணம் 396 (அ) (i) மற்றும் (iii) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும். காலம் 06 மாதங்களை மிகைத்த ரூபா 2,363,351 பெறுமதியான 07 டிப்போக்களின் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 79 காசேலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை போக்குவரத்துச் சபைகளின் 06 மாதங்களை மிகைத்த காசேலைகள் தொடர்பான விபரத்தை ஆராய்ந்து பார்த்து உரிய தரப்பினர்களுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் அக்காசோலைகளுக்காக பணமாக்குதல் அல்லது மீண்டும் வழங்குமாறு வேண்டப்பட்டிருக்காததனால் மேற்கூறிய காசோலைகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செல்லுபடியாகும் காலம் 06 மாத்தினை மிகைத்த காசோலைகளை வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ix) | நிதிப்பிரமாணம் 450 | தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாக கடந்த மாத்திற்கான செலவு தொடர்பாக மாதாந்த | தேசிய பாதீட்டின் மூலம் பஸ்களை புனரமைப்புச் செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட | ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து பணத்திற்காகவும் உரிய செலவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூற்று 170 ஆவது தீறைசேரி படிவத்தில் தயாரித்து ஒவ்வொரு மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களாலும் தமது கணக்கீட்டு உத்தியொகத்தருக்கு சமர்ப்பிக்கப்ட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவுக்காக வழங்கப்பட்ட ரூபா 2,000 மில்லியன் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி செலவு செய்யப்பட்ட ரூபா 916,360,000 செலவு தொடர்பான மாதாந்த கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு விடுவிக்கப்படுவதாவது உரிய பஸ்களை புனரமைப்புச் செய்ததன் பின்னர் அச்செலவுகளின் அறிக்கை பிரதிப் பொது முகாமையாளரினால் (தொழில்நுட்பம்) சான்றுபடுத்தப்பட்டு உள்ளக கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தி அமைச்சு செயலாளரின் மூலம் பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைத்ததன் பின்னராகும். | தொடர்பான மாதாந்த கூற்றினை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |
| (x) | நிதிப்பிரமாணம் 486 | தலங்கம டிப்போவின் மூலம் அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனிக்கு 2023 ஆம் ஆண்டின் போது எரிபொருளினை வழங்குவதற்காக அக்கம்பனியால் வழங்கப்பட்ட ரூபா 1,511,560 பெறுமதியினைக் கொண்ட 144266 ஆம் இலக்க மற்றும் 144253 ஆம் இலக்க இரண்டு காசேலைகள் மதிப்பிழந்துள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்திற்கு உட்பட்டு நிதிக் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை போக்குவரத்துச் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதனால் அதற்கிணங்க இந்த அறவீடுகள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ரூபா 1,511,560 பணம் மதிப்பிழந்தமை | மதிப்பிழந்த காசோலைகள் சம்பந்தாமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சம்பந்தமாக உதவி முகாமையாளர் - நிதி இடமிருந்து விளக்கம் கோரப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 6.1 மற்றும் 6.3 ஆம் பிரிவுகள் | அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொழிற்சங்க சம்மேளனத்திற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் முழு நேரமும் சங்கத்தின் நடவடிக்கைகளுக்காக விடுவிக்ககூடியதாக இருந்ததுடன் அவ்வாறு விடுவிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு நாட்டின் எந்தவொரு இடத்திற்கும் பயணம் செய்வதற்காக சுதந்திரமான புகையிரத அனுமதிப்பத்திரம் மற்றும் மத்திய போக்குவரத்துச் சபையின் சுதந்திரமான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சபையில் செயற்படுகின்ற 08 தொழிற்சங்கங்களுக்காக 2023 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் பயணம் செய்யக்கூடிய திறந்த சுதந்திரமான 138 பயண அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 43,046,993 ஆகும். அவ்வாறே பரிமாற்று அடிப்படையில் புகையிரத திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புகையிரத சுதந்திர 22 பயண அனுமதிப் பத்திரங்களை தொழிற்சங்கங்களுக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 25,294,500 ஆக இருந்தது. | இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்க நடவடிக்கைகளானது தாபன விதிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க அமுல்ப்படுத்தப்படவில்லை. இலங்கை போக்குவரத்துச் சபையின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்சங்கங்களுக்காக புகையிரத சுதந்திர அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் அமுல்ப்படுத்தப்படவில்லை. பல ஆண்டுகளாக இலங்கை போக்குவரத்துச் சபையின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்சங்கங்களுக்காக புகையிரத சுதந்திர அனுமதிப்பத்திரம் வழங்குதல் இடம்பெறட்டுள்ளது. | முறையற்ற வகையில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை மீளப் பெற்றுக்கொள்ளல் அல்லது நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை | அதிகாரச் சட்டத்திலுள்ள எற்பாடுகளின் பிரகாரம் சேவையிலிருந்து விலகிய | இந்த ஊழியர் 2017-10-21 ஆந் திகதி ஓய்வு | பணிக்கொடை மிகைக் கொடுப்பனவி |

| | | | |
|---|---|---|---|
| அதிகாரச் சட்டம் | ஊழியர்களுக்கு அவர்களுக்கு தகமையுள்ள பணிக்கொடைப் பணத்தினை விலகிய திகதியிலிருந்து ஒரு மாத்திற்குள் செலுத்த வேண்டிய போதிலும் மீதொடமுல்ல டிப்போவின் ஊழியர்களுக்கு விலகிய திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் பணிக்கொடையைச் செலுத்துவதற்கு முடியாமையின் காரணமாக 2023 செப்தெம்பர் 11 ஆந் திகதிய கணக்காய்வுத் திகதி வரை பணிக்கொடை மிகைக் கட்டணமாக ரூபா 459,729 பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | பெற்றிருந்ததுடன் அவருக்கு 2018-07-09 மற்றும் 2019-01-17 ஆகிய திகதிகளில் இரண்டு தடவைகளில் பணிக்கொடை செலுத்தப்பட்டது. திவிர பணச்சிக்கலின் காரணமாக பணிக்கொடை பணத்தினை ஒரு மாதத்திற்குள் செலுத்துவதற்கு முடியாதுள்ளது. | னைச் செலுத்திய நபரிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தொடர்ச்சியாக செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாத 10 மில்லியனை மிகைத்த 09 வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 156,24,791 மீதி காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் எந்த வட்டி வருமானமும் உழைக்கப்படாது அப்பணம் நடைமுறைக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | இக்கணக்காய்வு ஐய வினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 11 கணக்குகளை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது ரூபா 511 மில்லியன் மீதியுடனான ஒரு சேமிப்புக் கணக்கும் ரூபா 336 மில்லியன் மீதி காணப்பட்ட கணக்கும் நிதி சந்தை கணக்கில் நாளாந்தம் முதலீடு செய்யப்படுவதுடன் அதற்காக வட்டி வருமானம் கிடைத்துள்ளது. | நடைமுறைக் கணக்கு மீதியினை வினைத்திறனான முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் சபையின் டிப்போக்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் பேணப்பட்டு வருகின்ற 24 மேிப்புக் கணக்குகளின் ரூபா 10 மில்லியனக்கு மேற்பட்ட மீதியாக ரூபா 2,554,915,542 பணம் பேணப்பட்டு வந்திருந்தது. எனினும் அப்பணத்தை நிலையான வைப்புக்களிலேனும் முதலீடு செய்து உயர்ந்த வட்டி வருமானத்தினைப் | இதில் குறிப்பிட்ட தலைமை அலுவலகதத்தினால் பேணப்பட்டு வருகின்ற கணக்கானது சந்தை முதலீட:டு கணக்கானதுடன் அக்கணக்கிற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் அனைத்து நடைமுறைக்கணக்கிலுமுள்ள பணம் நாளாந்தம் இக்கணக்கிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. | தேவையான அளவிற்கு கணக்குகளில் பணத்தை நிறுத்திவைத்து மிகுதிப் பணத்தை வினைத்திறனாக முதலீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | அதிவேக வீதியில் ஓடுவதற்காக ஒரு புதிய பஸ்ஸினை கொள்வனவு செய்வதற்காக முற்பணமாக ரூபா 5,000,000 பணம் 2022 திசெம்பர் 01 ஆந் திகதி தங்காலை டிப்போவினால் ருகுணு பிராந்திய அலுவலகத்தின் 01310029192211l ஆம் இலக்க கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை புதிய பஸ்ஸினை அல்லது பெற்றுக்கொண்ட பணத்தை உரிய டிப்போவிற்கு மீள வழங்குவதற்கு பிராந்திய அலுவலகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்காலை டிப்போவிற்கு ஒரு பஸ்ஸினை வழங்குவதற்காக பெற்றுக்கொண்ட பணம் 2022 ஆம் ஆண்டின் போது 60 ஆண்டுகளை பூரணப்படுத்தீயுள்ள அனைத்து நபர்களும் ஓய்வுபெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தின் மூலம் தெரியப்படுத்தியதோடு அவர்களின் பணிக்கொடைப் பணத்தை செலுத்துவதற்கு ருகுணு பிராந்தியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | புதிய பஸ்ஸினை கொள்வனவு செய்வதற்கு அல்லது முற்பணத்தை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.9 வரிப்பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு ரூபா 93,129,750 பெறுமதியினைக் கொண்ட 81 சுதந்திர புகையிரதப் பயண அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த புகையிரத சுதந்திர அனுமதிப்பத்திரம் தனிப்பட்ட பெயருக்கு வழங்கப்பட்டிருக்குமாயிருந்தால் அல்லது அது கடமைத் தேவைப்பாட்டிற்காக வழங்கப்பட்டு கடமை பூர்த்தி செய்யப்பட்தன் பின்னர் மீள ஒப்படைக்கப்படாத சந்தர்ப்பத்தில் அதனைப் பொறுப்பேற்ற நபர் மேற்கூறிய சுற்றறிக்கைக்கு இணங்க வரிக்கு உட்படுவார் . அந்த புகையிரத சுதந்திர அனுமதிப்பத்திரத்தின பெறுமதியின் மாதாந்த தொகையான ரூபா 95,813 பெறுமதியான முற்பணங்களானது தனிநபர் வருமான வரி கணிப்பீட்டின் போது தொழில் வாய்ப்பு பிரதிபலனாக நியமப்படுத்தி முற்பணங்களின் தனிநபர் வருமானவரி கணிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையினால் இந்த அனுமதிப்பத்திரத்தினை | பரிமாற்று அடிப்படையின் கீழ் புகையிரத திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 81 புகையிரத சுதந்திர அனுமதிப்பத்திரங்களானது தலைமை அலுவலகத்தின் பிரிவுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து பயண அனுமதிப்பத்திரங்களும் உரிய பிரிவுகளின் தொழிற்சங்கங்களின் பெயர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் எச்சந்தர்ப்பத்திலேனும் புகையிரத சுதந்திர அனுமதிப் பத்திரமானது தனிப்பட்டவர்களின் பெயருக்கு வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்வாய்ப்பு பிரதிபலன்களை கணித்து வருமானவரி அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைப்படியாக மற்றும் அறிக்கையை வைத்திருக்காது பகிரப்பட்டுள்ளதனால் அந்த அனுமதிப்பத்திரமானது பிழையான பயன்பாட்டிற்கும் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தனிப்பட்டவர்களின் வருமான வரிக்காக ஊழியர்களின் தொழிலிவாய்ப்பின் மூலமான பெறுவனவுகள் மற்றும் இலாபத்தை கணிப்பீடு செய்யும் போது மேற்கூறிய ஊழியர்களினால் பெற்றுக்கொண்ட மற்றும் உழைத்த பிரதிபலன்களாக உள்ளடக்கப்பட வேண்டிய பணத்தினை அளவீடு செய்யும் போது தொலைபேசிப்படி மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள சுதந்திர பயண அனுமதிப் பத்திரங்களின் பெறுமதி உள்ளடங்கலாக கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் ஊழியர்களுக்கு வருமான வரிக்கு உட்பட்ட உழைப்புக்களை சரியாக கணிப்பீடு செய்து வரிப்பெறுமதி கணிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 835,621 பணம் வருமான வரியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்களுக்கு கடமைக்கு சமூகமளிப்பதற்கு இந்த பயண அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வசதிகள் ஊழியர்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே வழங்கப்பட்டுள்ளதுடன் அது சுதந்திர அனுமதிப்பத்திரத்தினைப் போல சேவை நிலையத்தின் அடையாளத்தையும் உறுதிப்படுத்துவதற்கான ஒரு அடையாள அட்டையாகும். | நிலுவை வருமான வரியினை துரிதமாக அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

## 1.10 தகவல் தொழில்நுட்ப (IT) பொது நிருவாக முறைமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| கட்டுபெத்த அதிசொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவையின் பஸ்களுக்காக ஒரு பஸ்ஸிற்கு 04 CCTV கமராக்கள், Fuel Senser with GPS Based Tracking Unit மற்றும் தனியான சேர்வர் கணனியுடன் பின் முடிவு (Backend) உள்ளீட:டு முறைமையை உள்ளடக்கிய அதிசொகுசு பஸ்களுக்கான Supply, Installation and Commissioning of GPS Tracking and Vedios Surveillance Solution 125 இனை பொருத்துவதற்கான கேள்வி 2018 யூன் 25 ஆந் திகதி M/S ATSL International (Pvt) Ltd. இற்கு ரூபா 33,628,840 தொகைக்கு வழங்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யாத நிலைமையில் உரிய | உரிய நிறுவனத்துடன் இலங்கை போக்கவரத்துச் சபை கையொப்பமிட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்த உபகரணங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் இந்த வழங்குனருக்கு பணத்தை செலுத்தும் போது பிரதி பொது முகாமையாளரினால் (செயற்பாடு) உரிய உபகரணங்கள் முறைப்படியாக பொருத்தப்பட்டுள்ளது எனவும் அந்த உபகரணங்கள் செயற்படும் | தொடக்க சாத்தியவள ஆய்வினூடாக தேவைப்பாட்டினை முறைப்படியாக இனங்கண்டு தொடர்ச்சியான ஆய்வின் மூலம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதுடன் ஏற்பட்ட நட்டத்தினை மீள்நிரப்பல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வழங்குனருக்கு 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதியிலிருந்து 2020 செப்தெம்பர் 09 ஆந் திகதி வரை 07 காசோலைகளின் மூலம் ரூபா 33,306,894 செலுத்தப்பட்டிருந்தது. இக்கேள்வி ஆரம்பத்திலிருந்து அமுல்ப்படுத்துதல் முடிவடையும் வரை சபையினால் எடுக்கப்பட்ட பிழையான முகாமைத்துவ தீர்மானம், தேவையான Server முறைமை மற்றும் கணனியுடனான செயற்பாட்டு நிலையம் ஸ்தாபிக்கப்படாமை, முறைமையினை ஸ்தாபிப்பதற்குத் தேவையான அதிசொகுசு பஸ்களின் அளவினை வழங்குவதற்கு சபை தவறியிருந்தமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் செயற்திட்டம் வெற்றியளிக்காதிருந்ததுடன் 03 ஆண்டுகள் உத்தரவாத காலத்திற்குள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையை மீறியமை தொடர்பாக இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பமும் இழக்கப்பட்டிருந்தது. தற்பொழுது வரை இந்த பஸ்களுக்குரிய உபகரணத் தொகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்களும் கூட காணாமல் போயிருந்ததுடன் எந்த செயற்பாட்டு நடவடிக்கையையும் அமுல்ப்படுத்துவற்கு முடியாதிருந்ததனால் இப்பெறுகைகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் நிதிரீதியாக சபைக்கு ரூபா 33,306,894 நட்டம் ஏற்பட்டிருந்தது. | நிலையில் காணப்படுகின்றது எனவும் வழங்கிய சான்றிதழின் அடிப்படையில் இந்த உபகரணங்கள் தொடர்பாக வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக இக்கொடுப்பனவு தொடர்பான இறுதித் தவணைப் பணத்தினை செலுத்துவதற்காக தனியான பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,098,934,630 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 1,922,737,782 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 823,803,152 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானம் அதிகரிக்கும் சதவீத்தினை விட செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்எடிற்கான பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்து அதிகரித்தல் மற்றும் குறைவடைதல் சதவீதம் கீழே தரப்படுகின்றன.

| வருமானம் செலவு | ஆண்டு (2023) (ரூபா மில்.) | ஆண்டு (2023) (ரூபா மில்.) | அதிகரித்தல் சதவீதம் (%) |
|---|---|---|---|
| பயணப் பாதை வருமானம் | 56,861 | 54,957 | 3.46 |
| ஏனைய வருமானம் | 15,300 | 11,393 | 34.29 |
| பஸ் செயற்பாட்டுச் செலவுகள் | 18,610 | 18,060 | 3.05 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை | 41,464 | 37,344 | 11.30 |
| ஏனைய செலவுகள் | 9,723 | 6,790 | 43.20 |

2.2.1 மீளாய்வாண்டில் பயணப்பாதை வருமான அதிகரிப்பு 3 சதவீதம் அளவில் குறைந்த சதவீதம் என அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானங்களுடன் ஒப்பிடுகையில் 34 சதவீத்தினால் அதிகரித்திருந்ததுடன் போக்குவரத்து கட்டணம் அதிகரித்ததன் மூலம் நிவாரண அடிப்படையில் பருவகால அனுமதிப்பத்திரங்களின் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் நபர்களின் அளவு அதிகரித்தல் இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

2.2.2 பஸ்களின் செயற்பாட்டு செலவுகளை வருமானத்துடன் ஒப்பிடுகையில் 3 சதவீத்தினால் அதிகரித்திருந்ததுடன் செலவுடன் ஒப்பிடுகையில் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்படவில்லை.

2.2.3 எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைகளின் விலைகள் அதிகரித்தல், முறையான உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் எரிபொருள் பகிர்ந்தளித்தலும் பயன்படுத்தலும் இடம்பெற்றிருக்காமை என்பன எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை செலவு 1 சதவீத்தினால் அதீகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

2.2.4 ஏனைய நேரடி கிரயம் 43 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் டொலரின் பெறுமதிக்கு நேரொத்த வகையில் உதிரிப்பாகங்களில் விலை அதிகரித்தல் மற்றும் முறையான கட்டுப்பாடின்றி உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் கணக்கு கூற்றுக்களிலுள்ள தரவுகளுக்கு நேரொத்த வகையில் பிரதான விகிதாசாரம் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **விகிதாசாரம்** | **2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு** | **2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு** |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் | 1.52% | 0.73% |
| தேறிய இலாப விகிதம் (மானியம் மற்றும் நிவாரணங்களுக்கு முன்னர்) | 2.83% | (0.247%) |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 1.24:1 | 1.34:1 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 0.94:1 | 1.03:1 |

நடைமுறைச்சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதத்தின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களினை விட நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துள்ளது என அவதானிக்கப்பட்டது. நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணம் பொறுப்புக்கள் மீதிகளில் இனங்காணப்படாத மீதி மற்றும் பிழையான கணக்குப் பதிவுகள் காணப்பட்டமை என பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | கண்டி பிராந்திய அதிகாரப் பிரதேசத்தில் சிக்கனமற்ற வீதிகளாக 46 வீதிகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த வீதிகளில் ஒரு பஸ் வீதம் ஓடுவதற்கு ஈடுபடுத்துவதற்காக | கண்டி பிரதேசத்தில் காணப்படுகின்ற சிக்கனமற்ற வீதியாகக் கருதப்படுகின்ற வீதிகள் மிகவும் சிக்கலான நிலையில் காணப்பட்டன. | ஆகக் குறைந்த வரையறைகளைக் கருத்தில் கொண்டு இச்சேவைகளினால் ஏற்படுகின்ற வருமான |

| | | | |
|---|---|---|---|
| | நிர்ணயிக்கப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட கிலோ மீற்றர்களின் அளவு 7,111.1 கிலோ மீற்றர்களாகும். அந்த வீதிகளில் நாளாந்தம் ஓடுகின்ற கிலோ மீற்றர் அளவு 6,690.1 ஆனதுடன் அந்த ஓடுதல் கிலோ மீற்றர் அளவுக்கு இணங்க கணிப்பீடு செய்யப்பட்ட சிக்கனமற்ற கிலோ மீற்றர்களின் அளவு 3,243.2 கிலோ மீற்றர்களாகும். இதற்கிணங்க கணிப்பீடு செய்யப்பட்ட சிக்கனமற்ற ஓடுதல் கிலோமீற்றர் 3,243.2 இன் மூலம் நாளாந்தம் இழக்கப்படுகின்ற வருமானம் ரூபா 5,804,679 ஆகும். இந்த பஸ்கள் ஓடும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஆகக் குறைந்த வரையறைகளை கவனத்திற்கு எடுத்து இச்சேவைகளின் மூலம் ஏற்படுகின்ற வருமான பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கும் பொதுமக்கள் சேவையினைப் பேணுவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எனவே அந்த வீதிகளில் பஸ்கள் ஓடும் போது அந்த பஸ்கள் தொடர்ச்சியாக இடர் நிலைக்கு உள்ளாகின்றன. எனினும் மேற்கூறிய பஸ்களுக்கு வெறு பஸ்களை ஈடுபடுத்துவதற்கு டிப்போவுக்கு முடியாதிருந்ததனால் சிக்கனமற்ற வீதியில் ஓடவேண்டிய முழுமையான கிலோமீற்றர் அளவினை ஓடுவதற்கு முடியாதிரந்ததன் காரணமாக சில நாட்களில் வருமானம் இழக்கப்படுகின்றது. | பற்றாக்குறையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் செலுத்த வேண்டிய செலவு மீதியான ரூபா 517,859,913 மீதியினுள் 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவரும் பதுளை டிப்போவின் ரூபா 288,246,841 தொகையான பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டு மீதி காணப்பட்டதுடன் பணிக்கொடை கொடுப்பனவினை நாளதுவரையாக மேற்கொள்ளும் நிலைமையில் இந்த ஒதுக்கீட்டு மீதியானது பிழையான கணக்கு மீதி என அவதானிக்கப்பட்டது. இந்த மீதி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகளானது நிதி அறிக்கைகளில் நீண்டகாலமாக காணப்பட்டுவரும் மீதிகளாகும். 2005 இலிருந்து 2017 வரையான காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையில் காணப்பட்ட நிதிச் சிக்கலின் காரணமாக வழங்கனர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது டிப்போ மட்டத்தில் கொடுப்பனவு செய்வதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் வழங்கலினை தொடர்ச்சியாக பேணுவதற்காக உரிய வவுச்சர்கள் தலைமை அலுவலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | இந்த மீதிகளானது உண்மையாகவே செலுத்த வேண்டிய மீதியா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மீதிகளின் உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது கணக்கீட்டு தவறாக இருந்தால் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் டிப்போக்களில் பயன்படுத்துகின்ற GPRS டிக்கட் இயந்திரங்களுக்காக பயன்படுத்துகின்ற வெப்ப (Thermal) கடதாசி டிக்கட் ரோல்களை கொள்வனவு செய்வதற்காக 03 மாத தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தேசிய போட்டி நடைமுறையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட டிக்கட் ரோல்கள் பிராந்திய அலுவலகங்களினூடாக கொள்வனவு செய்து டிப்போக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு பெறுகைக் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்தது. அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக 24 டிப்போக்களின் மூலம் ரூபா 17,534,900 பெறுமதியைக் கொண்ட 161,110 டிக்கட் ரோல்களை நேரடியாக கொள்வனவு செய்தல் மற்றும் ஒரு டிக்கட் ரோலின் சந்தை விலையான ரூபா 75 விலை திருத்தம் செய்யப்படாது ரூபா 108.84 விலைக்கு உரிய வழங்குனரிடமிருந்து 364,400 டிக்கட் ரோல்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒன்றிற்கு ரூபா 19.64 வீதம் ரூபா 7,156,816 தொகை மிகையாகச் செலுத்தியிருந்தமை, மீண்டும் விலைத்திருத்தம் இன்றி, உரிய வழங்குனருடன் முன்னர் இணங்கிக்கொண்ட விலைக்கே 603,180 டிக்கட் ரோல்களை கொள்வனவு செய்ததன் மூலம் சபைக்கு ரூபா 11,846,455 நட்டம் ஏற்பட்டிருந்தமையும் 1,000,000 டிக்கட் ரோல்களைக் கொள்வனவு செய்வதற்காக கோரப்பட்ட கேள்வி விலையான ரூபா 49.65 இற்கு 603,180 டிக்கட் ரோல்களை கொள்வனவு செய்யாது முன்னைய | அனைத்து பிராந்தியங்களுக்கும் பிரதிப் பொது முகாமையாளரினால் (செயற்பாடு) பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள டிக்கட் ரோல்களின் அளவு சம்பந்தமாக பிராந்தியங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்படாத வழங்குனர்களிடமிருந்து டிக்கட் ரோல்களை கொள்வனவு செய்திருந்தால் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு முரணான இவ்வாறான செயற்பாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்கும் ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கேள்விமனுதாரரிடமிருந்து ரூபா 108.84 விலைக்கு கொள்வனவு செய்ததன் மூலம் சபைக்கு ரூபா 35,702,224 நட்டம் ஏற்பட்டிருந்தமையின் காரணமாக சபைக்கு ஒட்டுமொத்தமாக ரூபா 42,859,040 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே தொடக்க வழங்குனரினால் வழங்கப்பட்ட டிக்கட் ரோல் கடதாசிகளின் அகலம், ரோல்களின் சுற்றளவு மற்றும் ஒரு ரோலில் இருக்க வேண்டிய நிறை முரண்பட்டு இருந்ததுடன் நுழைவுச்சீட்டு கடதாசிகளில் காபன் பரப்பிய மேற்பரப்பு போதியளவில் இல்லாமையின் மூலம் நுழைவுச் சீட்டுக்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிற்குத் தேவையான சிலின்டர் முனைகளை கொள்வனவு செய்வதற்காக விலை மனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒரு கேள்வி மனுதாரரினால் மாத்திரம் கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அக்கேள்வி மனுவை மதிப்பீடு செய்து கணிசமான கேள்விதாரராக அவரினால் சமர்ப்பித்த ரூபா 139,328,000 தொகையான கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு கேள்விச் சபை தீர்மானித்திருந்தது. கேள்விதாரரின் வேண்டுதல் இல்லாது சமூக பாதகாப்பு வரியாக ரூபா 7,308,500 பணத்தை கேள்விப் பெறுமதியில் உள்ளடக்குவதற்கு கேள்விக் குழுவின் செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் கேள்வச் சபை நடவடிக்கை எடுத்திருந்தமை, பெறுகை நடவடிக்கை 2022 மார்ச் 09 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 யூன் 06 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிரந்தமை, மேற்கூறிய பெறுகை 2023 ஒக்தோபர் 18 ஆந் திகதி வழங்குதல், தொடக்க உடன்படிக்கையின் 04 ஆம் பிரிவின் இரண்டாவது பந்தியை மாற்றி தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு இருந்த | வழங்கும் கடித்தினை வழங்குவதற்கு முன்னர் இந்த 2.5% சமூக பாதுகாப்பு பங்களிப்பினை வழங்குமாறு லங்கா அசோக் லேலன்ட் தனியார் கம்பனி வேண்டுதலினைச் சமர்ப்பித்துள்ளது. இந்த சமூக பாதுகாப்பு பங்களிப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததானது 2022 - 76 ஆவது திணைக்கள பெறுகைக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. | விரலை மனுக்களைக் கோரும் போது உரிய வரிக்கான பொறுப்பினை கம்பனியால் வெளிப்படுத்த வேண்டியதுடன் கேள்விச் சபை அதற்காக தலையீடு செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிபந்தனையை மாற்றம் செய்தல், பொருட்கள் வழங்குதல் முடிவுறுத்தப்பட வேண்டிய காலத்தை 2023 திசெம்பர் 15 ஆந் திகதி வரை நீடித்தல், 2023 திசெம்பர் 15 ஆந் திகதி வரை உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குனரினால் வழங்கப்பட வேண்டிய 204 சிலின்டர் முனைகளை வழங்குவதற்குத் தவறியிருந்தமை என்பவற்றின் காரணமாக பெறுகைக் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் வழங்கப்பட்ட 176 சிலின்டர் பெட்டிகளில் (கட்டுக்கள்) 22 சிலின்டர் பெட்டிகள், நிராகரிக்கப்பட்டிருந்ததன் மூலம் இப்பெறுகைகளின் காரணமாக சபைக்கு ரூபா 14,215,725 நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | சபையின் வாகன அணிகளுக்குத் தேவையான டயர்களை மீள் நிரப்புதல் மற்றும் மீள ஒழுங்கமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் பின்னர் 2022 ஆம் ஆண்டு வரை பெறுகை மேற்கொள்ளாது 2017 ஆம் ஆண்டில் தெரிவுசெய்த வழங்குனரிடமிருந்து தொடர்ச்சியாக மீள்நிரப்புதல் மற்றும் மீள ஒழுங்கமைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் விலை ஏற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 யூலை மாதம் 20 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் விலை மனுவை திருத்தம் செய்து மேற்கூறிய வழங்குனரிடமிருந்தே கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்குத் தேவையான முழு டயர்களின் அளவினையும் கொள்வனவு செய்வதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டிற்கான 04 மாதங்களின் டயர் தேவைப்பாட்டினைக் காட்டி ,8840 மீள்நிரப்பல் டயர்களையும் 34,856 மீள ஒழுங்கமைத்தல் டயர்களையும் கொள்வனவு செய்வதற்காக கேள்வி | 19/3139/123/084-1 ஆம் இலக்க அமைச்ரவை பத்திரத்திற்கு இணங்க 2019-11-11 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத் திர்மானத்திற்கு இணங்க புதிய பெறுகை நடைமுறை முடிவடையும் இலங்கை போக்குவரத்துச் சபை டயர்களை மீள் நிரப்புதல் மற்றும் மீள ஒழுங்கமைப்பதற்காக சேவைகளை தற்போதைய வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கை 2022-07-06 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை நிரந்தர பெறுகைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் அக்குழுவினால் அதற்காக அங்கீகாரம் வழங்கப்படவில்லை எனவும் புதிய பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் தெரிவித்து போக்குவரத்து | சரியாகவும் முன் ஆய்வுடனும் நடவடிக்கை திட்டமிடப்பட வேண்டியதுடன் நிறுவனத்திற்கு உச்ச அளவு நலன் ஏற்படும் வகையில் கேள்விதாரர்களைத் தெரிவு செய்த அவர்களக்கு கேள்விகள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறே கேள்வழயை தாமதித்து முன்னைய வழங்கனருக்கு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்த கேள்விச் சபைக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோரப்பட்டிருந்ததுடன் முன்வந்த 17 விலைமனுதாரர்களில் 14 விலை மனுதாரர்கள் கணிசமான மனுதாரர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்படாது கேள்வி மனுவை கோருவதற்கு முன்னர் கவனித்துப்பார்க்க வேண்டிய விடயங்கள் மற்றும் காரணிகளை கவனித்துப் பார்ப்பதற்கு உட்பட்டு அங்கீகாரத்தினை வழங்குதல் பிற்போடப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீள்நிரப்புதல் டயர்கள் மற்றும் டயர்களை மீள ஒழுங்கமைத்தல் மேற்கொள்வதற்காக கேள்விகள் வழங்காதிருத்தல் மற்றும் மேற்கூறிய அமைச்சரவை தீர்மானித்த விலைக்கு கொள்வனவு செய்ததன் காரணமாக சபைக்கு ரூபா 2,841,249,937 நிதி பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டதுடன் அதன் காரணமாக ரூபா 356,007,991 நட்டம் ஏற்பட்டிருந்தது. | அமைச்சின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2023 செப்தெம்பர் 13 ஆந் திகதி மொறட்டுவை டிப்போவின் காசு மீதி பௌதீகரீதியாக பரீட்சிகட்கப்பட்டதுடன் அத்திகதியில் காணப்பட்ட காசு மீதியில் ரூபா 54.179 காசுப் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டது. இப்பற்றாக்குறை நாளாந்தம் பேணப்பட்டு வருகின்ற பற்றாக்குறை என அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கையினை முகாமைத்துவம் எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு 2023-09-13 ஆந் திகதிய பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறையினை ஏற்றுக்கொள்கிறேன். | நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வதற்கும் பொறுப்பான நபர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பஸ்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் செலவு ரூபா 40,415,452,419 ஆகும். இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் அணிக்கு புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 500 பஸ்களுக்கு மேலதிகமாக ஏனைய அனைத்து பஸ்களும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அதிக வயதினைக் கொண்ட பஸ்களாவதுடன் இந்த பஸ்களின் எரிபொருள் பம்பிகளில் காணப்படுகின்ற பலவீனங்களின் அடிப்படையில் எரிபொருள் நுகர்வு அதிகமானது என அவதானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக தெரிவுப் பரீட்சிப்பிற்கு இணங்க திருத்தம் செய்யப்பட்ட எரிபொருள் பம்பிகளிலிருந்து ஓடக்கூடிய கிலோ மீற்றர் அளவு 3.8 இலிருந்து 4.0 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் சபையின் அனைத்து டிப்போக்களிலும் பஸ்களின் எரிபொருள் நுகர்வானது லீற்றருக்கு 2.5 கிலோ மீற்றருக்கும் 3.1 கிலோ மீற்றருக்கும் இடைப்பட்ட வீச்சுடையது என்பதனால் எரிபொருள் நுகர்வு லீற்றருக்கு 3.8 கிலோ மீற்றர் அளவில் பேணும் போது ஒரு லீற்றர் எரிபொருளிலிருந்து ஓடுகின்ற கிலோமீற்றர் அளவு 0.7 அதாவது 18 சதவீத்தினால் அதிகரிக்க வேண்டியதுடன் வருடாந்த எரிபொருு கிரயத்தினை ரூபா 7,274,781,435 ஆல் குறைக்கக்கூடியதாக உள்ளமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | எரிபொருள் பம்பிகளை திருத்தம் செய்து ஓடுகின்ற குறைந்த எரிபொரு் செயற்பாட்டுடனான ளபஸ்களுக்கு பொருத்துவதன் மூலம் எரிபொருள் செயற்பாட்டினை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவரலாம் என்பதனை ஏற்றுக்கொள்வதுடன் தற்பொழுது பிராந்திய வேலைத் தளங்களில் திருத்தம் செய்தல் உச்ச இயலளவில் மேற்கொள்ளப்படுகின்றது. | பஸ்களின் எரிபொருள் பம்பிகளை திருத்தம் செய்து ஓடுவதற்கு ஈடுபடுத்தி அதன் மூலம் செலவினைக் குறைப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாத்தறை டிப்போவினால் 2023 ஆம் ஆண்டின் போது 03 கம்பனிகளின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மீள ஒழுங்கமைத்தல் டயர்கள் மற்றும் மீள்நிரப்பப்பட்ட டயர்கள் உரிய காலத்துக்கு முன் வெற்றியளிக்காமை தொடர்பாக | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை என ஏற்றுக்கொள்கிறேன். | உரிய காலத்திற்கு முன்னர் வெற்றியளிக்காமை தொடர்பாக உரிய முறைப்படி அறிக்கையினைப் பேணி சரியாக நிதி ஏற்பாட்டினை |

| | | | |
|---|---|---|---|
| | 2023 யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் மாதிரியை பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்டவாறு மேற்கூறிய கம்பனியால் கொள்வனவு செய்த டயர்களின் உரிய காலத்திற்கு முன் வெற்றியளிக்காமைக்கான நிதி ஏற்பாடாக அறவிட வேண்டிய ரூபா 4,248,303 பணத்தை அறவீடு செய்வதற்காக டிப்போவின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஹக்மன டிப்போவில் மீள்நிரப்பல் டயரின் பயன்படுத்தும் சதவீதம் 32 வீதமாக இருந்ததுடன் மீள ஒருங்கமைத்தல் டயரின் பயன்படுத்தும் சதவீதம் 20.5 வீதமாகும். இதற்கிணங்க 2023 ஆம் ஆண்டில் டயர்களின் மீள ஒருங்கமைத்தல் செய்தல் மற்றும் மீள்நிரப்பங்களின் பயன்படுத்தும் சதவீதத்தின் சராசரிப் பெறுமதி 26.25 சதவீதமாகும். 2023 ஆம் ஆண்டில் ஹக்மன டிப்போவின் மூலம் கொள்வனவு செய்த டயர்களின் பெறுமதி ரூபா 41,742,502 ஆக இருந்ததுடன் டயர்கள் உரிய காலத்திற்கு முன் வெற்றியளிக்காமையின் காரணமாக பயன்படுத்தாத பெறுமதியான ரூபா 30,785,095 இற்காக நிதி ஏற்பாட்டினை அறவீடு செய்வதற்கு டிப்போ முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான பொறியியல் பிரிவின் அறவீடு செய்யும் அறிக்கை தற்பொழுது களஞ்சியத்திற்கு கிடைத்துள்ளதுடன் அந்த அறிக்கையில் முழு அறவீட்டுப் பெறுமதி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ரூபா 8,776,662 என்பதாகும். அப்பணத்தில் தற்பொழுது வரை ரூபா 1,393,372 பணம் பகுதியளவில் அறவீடு செய்யப்பட்டுள்ளது. | உரிய காலத்திற்கு முன் வெற்றியளிக்காமை தொடர்பாக முறைப்படியாக அறிக்கையை பேணி சரியான நிதி ஏற்பாட்டினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | எரிபொருள் வழங்குவது சம்பந்தமாக தலங்கம டிப்போ முகாமையாளர் அதிவேகப் பாதை போக்குவரத்து (தனியார்) கம்பனியுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இணங்க முதலாவது ரூபா 500,000 தொகையான வைப்பு பணத்தை வைத்திருப்பதற்கும் அப்பணத்தில் 80 சதவீதம் வரை எரிபொருள் வழங்குவதற்கும் இணங்கிக்கொள்ளப்பட்டது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் வழங்கக்கூடிய கடன் எல்லை ரூபா 400,000 ஆக இருந்ததுடன் | அதிவேக போக்குவரத்து கம்பனியினை கலைத்தல் என்ற அமைச்சரவை தீர்மானத்தை தெரியப்படுத்தியதன் பின்னர் வழங்கிய ரூபா 1,511,560 பெறுமதியான 144266 மற்றும் 144253 ஆம் இலக்க 02 காசோலைகள் மதிப்பிழந்துள்ளன. அதன் பின்னர் உரிய பஸ்களுக்காக டீசல் வழங்குதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக முழுமையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு வரம்புகளை மீறி அதிகாரத்தினை தவறாகப் பயன்படுத்தி இடம்பெற்ற நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இனங்காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அக்கடன் எல்லையினை மிகைத்து ரூபா 1,978,010 பெறுமதியான எரிபொருள் டிப்போ முகாமைத்துவத்தினால் கடன் அடிப்படையில் மேற்கூறிய கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு எரிபொருளினை வழங்குவதற்காக டிப்போவிற்கு கிடைக்க வேண்டி இருந்த ரூபா 2,378,010 பணத்தினை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (உ) | வாகன விபத்து இழப்பீட்டு வழக்ககளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள NWP/HCCA/KUR/106/2019/F ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பு மற்றும் செயற்பாட்டு அட்டவணையின் பிரகாரம் சாரதிகளின் கவனயீனத்தின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 3,965,000 இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் வெல்லவாய மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற 1135/M ஆம் இலக்க வழக்கின் போது சாரதி தவறினை ஏற்றுக்கொண்டதன் காரணமாக ரூபா 2,125,000 இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க சபையினால் செலுத்தப்பட்ட முழு இழப்பீட்டுப் பணம் ரூபா 6,090,000 ஆனதுடன் சபையினால் இந்த வழக்கிற்கு அடிப்படையாக இருந்த இரண்டு பஸ்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்காததனால் நட்டத்தினை காப்புறுதியிலிருந்து இழப்பீடு செய்யமுடியாதிருந்தது. | NWP/HCCA/KUR/106/2019/F ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ரூபா 3,965,000.00 பணம் 2023.08.23 ஆந் திகதி முறைப்பாட்டாளருக்குச் செலுத்தப்பட்டது. அவ்வாறே வெல்லவாய மாவட்ட நீதிமன்றத்தின் 1135/m இலக்க வழக்கின் முறைப்பாட்டாளர் வாகன விபத்தின் காரணமாக நிரந்தரமாக ஊனமுற்றிருந்ததற்கான சாட்சி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கிணங்க நிரந்தர ஊனமடைதலுக்கு உள்ளாகியுள்ளார் என்ற விடயம் இழப்பீடு செலுத்தும் போது அதிக அளவான இழப்பீட்டினை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. | இழப்பீட்டினை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டுபெத்த அதிசொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவையின் வாகன அணியிலுள்ள 51 ஆசனங்களுடனான ND தொகுதியைச் சேர்ந்த 02 பஸ்களையும் 39 ஆசனங்களுடனான NB தொகுதியைச் சேர்ந்த 67 | 2023 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் வரை 21 பஸ்கள் ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மிகுதி பஸ்கள் அனைத்தும் பழுதடைந்தமையின் காரணமாக டிப்போ வளவில் | இது தொடர்பாக முகாமைத்துவம் கூடுதல் கவனம் செலுத்தி பஸ்களை திருத்தம் செய்து ஓடுவதற்கு ஈடுபடுத்தி வருமானத்தை அதிகரிக்கச் |

| | | | |
|---|---|---|---|
| | பஸ்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் நாளாந்தம் திட்டமிட்ட பயண தடவைகளுக்காக நிர்ணயிக்கப்பட்டவாறு பஸ்களை ஈடுபடுத்துவதன் மூலம் உழைக்கப்பட்டிருந்த நாளாந்த சராசரி வருமானம் ரூபா 10,244,130 ஆகும். எனினும் சபையின் தரவுகளின் பிரகாரம் வருடாந்தம் உழைக்ககூடிய வருமைானம் ரூபா 3,178 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் சேவையின் மூலம் உழைக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 836.39 மில்லியனாகும். இதற்கிணங்க ரூபா 2,341.61 மில்லியனால் உழைக்ககூடியதாக இருந்த வருமானம் குறைவடைந்திருந்தது. | நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்த பஸ்களை திருத்தம் செய்யும் நடவடிக்கை தாமதமடைந்தமைக்கு பிரதான காரணமாவது 2019 ஆம் ஆண்டிலிருந்து யூடோன் பஸ்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கு முடியாதிருந்தமையாகும். | செய்வதற்கான கால அட்டவணையை பூரணப்படுத்தி பயணிகளுக்கு உச்ச அளவு சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ருகுணு பிராந்திய அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற டிப்போக்களினால் செயற்படுத்த வேண்டிய 41 துாரப் பயணச் சேவைகள் மற்றும் 124 குறுகிய பயணச் சேவைகள் நீண்டகாலமாக செயற்பாடு நிறுத்திவைக்கப்பட்டிருந்தது எனவும் அதனால் நாளாந்தம் இழக்கப்படுகின்ற செயற்பாட்டு கிலோ மீற்றர் அளவு 43,245 ஆனதுடன் இந்த 165 சேவைப் பயணங்கள் செயற்பாட்டிற்கு சேர்த்துக்கொள்ளப்படாமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது சபைக்கு இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 2,430,801,450 ஆகும். | ருகுணு பிராந்தியத்திலுள்ள டிப்போக்களின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற குறுந்துார சேவைகளில் பயணிகளின் தேவைப்பாட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற பஸ்களின் தேவைகளை இனங்கண்டு பஸ்கள் செயற்பாட்டிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. | பஸ்களை கொள்வனவு செய்யும் போது மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சபைக்கு நட்டம் ஏற்படாத வகையிலும் பொதுமக்களுக்கு உச்ச அளவு சேவையை வழங்கும் வகையிலும் செயற்பாட்டு நடவடிக்கை திட்டமிடப்படுதல் வேண்டும். |
| (இ) | ருகுணு பிராந்தியத்திலுள்ள டிப்போக்களிடம் தெற்கு அதிவேக வீதியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக காணப்படுகின்ற நேர அட்டவணைத் தேவைப்பாடான 60 நேர அட்டவணைகளில் உள்ளடக்கப்படுகின்ற அளவு 43 ஆக இருந்ததுடன் மிகுதி நேர அட்டவணைத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்குத் தேவையான 17 பஸ்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நாளாந்தம் ரூபா | ருகுணு பிராந்தியத்தில் காணப்படுவது 13 பஸ்கள் மாத்திரமாகும். அந்த பஸ்களும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய பஸ்களாகும். இந்த பஸ்களிலும் செயற்பாட்டிற்கு சேர்த்துக்கொள்ளப்படுவது 06 பஸ்கள் மாத்திரமாகும். மிகுதி நேர அட்டவணைத் தேவைப்பாட்டில் ஒரு பகுதி 85% / 15% அடிப்படையில் பஸ்களை ஈடுபடுத்தி செயற்படுத்தப்படுவதுடன் | பஸ்களை கொள்வனவு செய்யும் போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொ்ளும் போதும் சபைக்கு நட்டம் ஏற்படாத வகையிலும் பொது மக்களுக்கு உச்ச அளவு சேவையை வழங்கும் வகையிலும் செயற்பாட்டு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 2,200,000 வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது சபையினால் இழக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 803 மில்லியனாகும். | புதிய சொகுசு பஸ்களை கொள்வனவு செய்தல் அத்தியவசியமானதாகும். | திட்டமிடப்படுதல் வேண்டும். |

**3.5 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.1 ஆம் பிரிவிற்கு இணங்க கொள்வனவு செய்வதற்காக சபையின் கேள்விச் சபைக்கு வழங்கக்கூடிய அங்கீகரித்த எல்லை ரூபா 50 மில்லியனாக இருந்தும் அதற்கு முரணாக சபையின் அசோக் லேலன்ட் மற்றும் டாடா வகையான பஸ்களுக்காக இரண்டு மாதங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்வதற்காக முன்னரே திட்டங்களைத் தயாரித்து ஒரு ஆண்டிற்குத் தேவையான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டு ஸ்டீல் இம்பெக்ஸ் என்ட் இன்டஸ்ரீஸ் (இந்தியா) கம்பனி மற்றும் அதற்கு ஒரு ஆண்டின் பின்னர் இரண்டாவது முழுமைபெற்ற கேள்வி மனுதாரரான நிம்பஸ் ஓடோமோடிவ் லங்கா கம்பனிக்கும் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக வழங்கல் செய்வதற்கு வாய்ப்பலித்தலின் மூலம் மேற்கூறிய கம்பனியால் முறையே ரூபா 1,583,900,400 மற்றும் ரூபா 358,420,376 ஆக மொத்தம் ரூபா 1,942,320,776 பெறுமதியான உதிரிப் பாகங்கள் வழங்கப்பட்டிருந்தன. சபையின் பிரதி பொது முகாமையாளரினால் (தொழில்நுட்பம்) 2012 நவம்பர் 20 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட உதிரிப்பாகங்கள் போலியான உதிரிப் பாகங்கள் என்பதனாலும் அந்த உதிரிப்பாகங்கள் உள்நாட்டு சந்தையில் நிவாரண | இச்சம்பவம் சம்பந்தமாக ஒரு முழுமையான அறிக்கை பின்னிணைப்பாகச் சமர்ப்பிக்கப்பட்டள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் அங்கீகரித்த எல்லைக்கு உட்பட்டு கொள்வனவு நடைமுறையினை செயற்படுத்த வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் தொழில்நுட்ப ரீதியாக பொருத்தமானது என உறுதிப்படுத்தி அதற்காக கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறே பெறுகை நடைமுறையினை மீறி நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யக்கூடியவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டு மேற்கூறிய உதிரிப்பாகங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அந்த எல்லையினை மிகைத்து உரிய கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தமை, சந்தை உடன்படிக்கையின் ஒரு பிரதி சட்டமா அதிபதிக்கு அனுப்பி அதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டிருக்காமை மற்றும் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையில் சபைக்கு பாதகமான நிபந்தனைகள் உள்ளடக்கப்படுதல், கேள்விப் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்காமையும் உரிய கேள்விக்காக அமைச்சரவை அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறிய உடன்படிக்கையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படுகின்ற உதிரிப்பாகங்களுக்காக 90 நாட்கள் கடன் நிவாரண காலம் வழங்குதல் மற்றும் பணம் செலுத்தாது கடந்து போகும் ஒவ்வொரு மாதத்திற்கும் 5 சதவீத வட்டி செலுத்த வேண்டியிருந்தும் மற்றும் சபையிடம் நிதி ஸ்திரத்தன்மை இல்லாத நிலைமையில் உள்நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட தொடக்க உதிரிபாக இருப்பு தரம் குறைந்த உதிரிப்பாகமாக இருந்ததன் காரணமாக அந்த உதிரிப்பாக இருப்பு நிராகரிக்கப்பட்டு கேள்வி இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கேள்வி நடைமுறைக்கு என்பதாக குழுவின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் 04 ஆண்டுகளாக தொடர்ச்சியாக அத்தியவசியமற்ற உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டடிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப்பாகங்கங்களுக்காக நாளதுவரையாக கொடுப்பனவு செய்யாமையின் காரணமாக வழங்குனர் கம்பனியால் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட

| | | | |
|---|---|---|---|
| | நியாயத்தீர்ப்பு வழக்கின் 2019 மே 09 ஆந் திகதிய இணக்கப்பாட்டின் பிரகாரம் சபையினால் செலுத்த வேண்டியிருந்த அமெரிக்க டொலர் 3,722,104 இற்குரிய ரூபா 664,722,000 தொகை 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறிய கேள்விக்கு ஒரு ஆண்டு காலம் மிகைத்திருந்தும் அதனை இரத்துச் செய்து புதிய கேள்வியை கோருவதற்குப் பதிலாக இரண்டாவது முழுமைபெற்ற கேள்விதாரரான நிம்பஸ் ஓடோமோடிவ் கம்பனிக்கு 26 டிக்போக்களுக்காக உதிரிப்பாகங்களை வழங்குவதற்கு ஒரு கேள்வியியை வழங்குதலும் அவருக்கு தீர்வை வரி நிவாரணம் வழங்குதலும் பிழையானது எனவும் சட்டத்திற்கு முரணானது எனவும் தெரிந்துகொண்டே 2012 யூன் 08 ஆந் திகதி கூடிய பணிப்பாளர் சபை வழங்குனருக்கு கேவியை ஒப்படைப்பதற்கு தீர்மானித்திருந்தது. | | |
| (ஆ) | இந்திய கடன் சரியான உடன்படிக்கையின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த கடன் பணத்தில் மிகுதியாக இருந்த அமெரிக்க டொலர் 20 மில்லியனைப் பயன்படுத்தி 15 ஆண்டுகளுக்கு மேல் பழமையான பஸ்களை சபையின் பஸ் அணியிலிருந்து நீக்கி தற்பொழுது பேணப்பட்டு வருகின்ற நகர சேவைகளை தடை ஏற்படாது பேணுவதற்காக பின்பக்கம் உயர்வான பக்கத்துடனான 50 - 54 (2x2) ஆசனங்களைக் கொண்ட புதிய 400 பஸ்களையும் பின்பக்கம் உயர்வான பக்கத்துடனான 32 - 35 (2x2) ஆசனங்களைக் கொண்ட 100 பஸ்களுமாக 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையினால் 2018 மே 23 ஆந் திகதி வழங்கிய கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்டையில் பெறுகை | 2018-06-05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மாற்றப்பட்டு 2020-01-01 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பஸ்களை கொள்வனவு செய்யும் பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. தொழில்நுட்ப தவறு உத்தரவாத காலத்திற்குள் அசோக் லேலன்ட் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு தருவதாக தெரிவிக்கப்பட்டது. | தொடக்க தேவைப்பாட்டினை முறைப்படியாக இனங்கண்டு நிதி இயலுமையின் பிரகாரம் பொது மக்களின் தேவைப்பாட்டினை வினைத்திறனாகவும் சுலபமாகவும் நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் தீர்மானம் எடுத்து பஸ்களை கொள்வனவு செய்யும் போது பயணிகள் வசதியாக பயணம் செய்யகூடிய பஸ் சேவைகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய பெறுகை ஆவணங்களும் தொழில்நுட்ப பொரள் விபரக் குறிப்பும் தயாரக்கப்பட்டு கேள்வி கோருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தும் 2020 சனவரி 01 ஆந் திகதி அப்போதிருந்த போக்குவரத்து அமைச்சரினால் எந்த விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி மேற்கூறிய அமைச்ரவை தீர்மானத்தினை மாற்றி அமைச்சரின் எழுத்துமூல ஆலோசனையின் அடிப்படையில் 32 - 35 ஆசனங்களைக் கொண்ட புதிய 500 சிறிய பஸ்களும் 42 - 45 ஆசனங்களைக் கொண்ட புன்புறம் உயர்நத பக்கமுள்ள புதிய 100 பஸ்களுமாக 600 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் மீண்டும் 2023 சனவரி 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 32 ஆசனங்களைக் கொண்ட Ashok Leyland Lynx 500 புதிய பஸ்களானது ஒரு பஸ் USD 25,662.50 வீதம் முழுப் பணமான USD 13,311,250 தொகைக்கு Ashok Leyland Limited India இடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு மேற்கூறிய பெறுகை வழங்கப்பட்டிருந்தது. இந்த பஸ்களுக்காக செலுத்தப்பட்ட முழுப் பணம் ரூபா 5,513 மில்லியனாக இருந்ததுடன் ஒரு பஸ்ஸின் பெறுமதி ரூபா 11.02 மில்லியனாகும். 32 - 35 ஆசனங்களைக் கொண்ட ஒரு பஸ்ஸின் மதிப்பீட்டு விலை ரூபா 5 மில்லியனாகும். இதற்கிணங்க 32 ஆசனங்களைக் கொண்ட ஒரு பஸ்ஸிற்கு மதிப்பீட்டு விலையினை விட ரூபா 6,02 மில்லியனாக ரூபா 3,010 மில்லியன் மிகையாகச்

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | கண்டி தெற்கு டிப்போவின் மூலம் மக்கள் வங்கியில் பேணப்பட்டு வருகின்ற 003100101199662 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் 2014 சனவரி 01 ஆந் திகதி ரூபா 2,237,831 பெறுமதியான ஒரு காசேலை வைப்புச்செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றில் அக்காசோலை வைப்புச் செய்யப்பட்ட எனினும் தேறப்படாத காசோலையாக காட்டப்பட்டிருந்ததுடன் அதனை தீர்த்துவைப்பதற்காக 2022 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 100,000 செலவு செய்து வங்கி கணக்கிற்குரிய வங்கி கூற்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அதனை பரீட்சிப்பிற்கு உட்படுத்தி காசேலை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கு நிதிப்பிரிவினால் நடவடிக்கை எடுக்காமையின் மூலம் உரிய காசோலை பிழையான பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்படவில்லை என திருப்தி கொள்வதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த மீதி நீண்டகாலமாக காணப்பட்டு வரும் மீதியாகுமம். இம்மீதி தொடர்பாக இதற்கு முன்னரும் விசாரணை செய்யப்பட்டிருந்த போதிலும் இம்மீதி தொடர்பாக எந்த ஆவணத்தினையும் தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது. | இது தொடர்பாக துரிதமாக பரீட்சித்துப் பார்த்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| வாகன அணியினை ஓடும் நிலையல் பேணுவதற்காக திறைசேரி மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் நிதி எற்பாட்டினை ஈடுபடுத்தி யடினுவர பிராந்திய வேலைத்தளத்தில் டிப்போக்களின் மூலம் அனுப்பிவைக்கப்படுகின்ற பழைய இன்ஜின் தொகுதிகள், பழைய கியர் பெட்டி, பழைய எரிபொருள் பம்பி, பழைய எரிபொருள் பாய்ச்சும் இயந்திரம், சிலின்டர் ஹெட், பழைய ஸ்டாடர் மோட்டர், பழைய ஓல்ட னேட்டர் என்பவைகளை திருத்தம் செய்து பஸ்களில் பொருத்தி விடுவிப்பதற்காக 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 396.60 மில்லியன் ஒதுக்கீடு செய்து பின்வருமாறு | இன்ஜின், கியர் பெட்டி, பஸ் பொடி, எரிபொருள் பம்பி, எரிபொருள பாய்ச்சும் இயந்திரம், சிலின்டர் ஹெட், ஓல்டனேட்டர், ஸ்டாடர் மோட்டார் ஆகிய துணைக்கருவிகளை முழுமையாக திருத்தம் செய்யும் போது அதில் பிரதான உதிரிப்பாகங்களுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் திருத்தம் செய்யப்படுகின்ற | கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படாது உதிப்பாகங்களும் துணைக் கருவகளும் வேலைத்தளங்களில் திருத்தம் செய்வதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டு அத்துணைக்கருவிக ளை திருத்தம் செய்வதற்கு ஈடுபடுத்துவதன் |

| | | |
|---|---|---|
| 3,480 அலகுகள் உற்பத்தி இலக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 3,420 அலகுகளாகும். அதற்காக செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 268.18 மில்லியனாக இருந்ததுடன் அதில் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்திய சதவீதம் 67 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது எதிர்பார்த்த இலக்கினை பூரணப்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | துணைக்கருவிகளின் உற்பத்திக் கிரய மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தினை விட குறைவடைவதற்கு இந்த விடயங்கள் தாக்கமளிக்கின்றது. | மூலம் கிரயத்தை குறைத்து பொதுமக்கள் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 இருப்பு, ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 மே 09 ஆந் திகதிய நியாயத்தீர்ப்பு கட்டளைக்கு இணங்க ஸ்டீல் இம்பெக்ஸ் என்ட் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு செலுத்தப்படாத விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா75,384,696 பெறுமதியினை கொண்ட 20 பெறுவனவுக் கட்டளைகள் தொடர்பான இருப்பு விடயங்கள் களஞ்சிய ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அந்த உதிரிப்பாகங்களை பயன்படுத்துகின்ற டாடா வகையான மற்றும் லேலன்ட் வகையான பழைய பஸ்கள் தற்பொழுது பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளதனால் விளைவற்றுக் காணப்பட்டதுடன் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இது தொடர்பான நியாயத் தீர்ப்பு நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன் இது தொடர்பான இருப்புக்கள் இலங்கை போக்குவரத்துச் சபையின் இருப்பிற்கு கொண்டுவரப்பட்டள்ளன. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட இருப்புக்களில் காணப்படுகின்ற பொருட்கள் இலங்கை போக்குவரத்:துச் சபையின் வாகன அணிக்கு பயன்படுத்தக்கூடியதாக இருக்குமாயின் அவற்றை இனங்கண்டு டிப்போக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேற்கூறிய இருப்பினை பயன்படுத்த முடியாது இருப்பின் அது தொடர்பான கைதவிர்ப்பு நடவடிக்கைகளை எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு விடயங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து இருப்பிற்கு எடுத்துக்கொள்வதற்கும் பயன்படுத்தாத இருப்புக்கள் சம்பந்தமாக தேவைப்படுகின்ற டிப்போக்களுக்கு வழங்குவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முறைப்படியாக பொறுப்பேற்காது லக்கல மஹவெலி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியில் டிப்போவினை ஆரம்பிப்பதற்காக 2021 செப்தெம்பர் 11 ஆந் திகதி அடிக்கல் வைக்கப்பட்டிருந்தும் 2023 நவம்பர் மாதம் வரை அக்காணியை பொறுப்பேற்று | லக்கல பல்லேகம காணியின் உறுதியினைத் தயாரிக்கும் நடவடிக்கைக்காக தேவையான நிலஅளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான நிலத்தின் | முன்னரே திட்டமிடப்படாதும் சாத்திய வள ஆய்வின்றியும் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளுக்காக இடம்பெறுகின்ற நட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | டிப்போவினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்காணியில் டிப்போவிற்குத் தேவையான கட்டிடம் நிர்மாணிக்கப்படும் வரை டிப்போவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக தேவையான செயற்பாட்டுப் பிரிவு, நிதிப்பிரிவு, பொறியியல் பிரிவு என்பவற்றிற்காக அலுவலக வசதிகளை வழங்குவதற்காக ஓடுவதிலிருந்து நீக்கப்பட்ட 03 பஸ்களை பயன்படுத்தி குளிரூட்டப்பட்ட 03 அலுவலக பஸ்கள் உருவாக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,632,440 பணம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பஸ்கள் புதிய டிப்போவின் அலுவலக நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுத்து டிப்போ ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அளவினை இனங்காண்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் தரப்பினர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய நில அளவைக் கட்டணத்தை செலுத்துதல் இடம்பெற்றுள்ளதுடன் இலங்கை போக்குவரத்துச் சபை காணியை டிப்போவிற்காக பொறுப்பேற்பதற்குரிய ஆவணங்கள் மஹவெலி அதிகார சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களால் அந்த ஆவணங்களில் கையொப்பமிட்டு இதுவரை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில் லை. | பொறுப்புக் கூறவேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | டாடா வகையான பஸ்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ரூபா 518,408 பெறுமதியான 83 வகையான உதிரிப் பாகங்கள் மொரட்டுவை டிப்போ களஞ்சியத்தில் இருந்ததுடன் டிப்போவிடம் டாடா வகையான பஸ்கள் இல்லாததனால் இந்த உதிரிப்பாகங்களைப் பயன்படுத்துவதற்கான இயலுமை இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தும் இந்த இருப்புக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத இசுசு வகையான 34 உதிரிப்பாகங்களும் களஞ்சியத்தில் இருந்ததுடன் அந்த இருப்புக்களை மதிப்பீடு செய்து இருப்பிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மொரட்டுவை டிப்போவில் டாடா வகையான பஸ் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் டாடா வகையான 03 பஸ்கள் தற்பொழுது ஓடுவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் இசுசு பஸ்களின் 34 வகையான உதிரிப் பாகங்கள் டிப்போ களஞ்சியத்தில் இருந்ததுடன் ஏனைய டிப்போக்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் வழங்குவதற்கான இயலுமை உள்ளது. | இருப்பு விடயங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து இருப்பிற்கு எடுத்துக்கொள்வதற் கும் பயன்படுத்தாத இருப்புக்கள் சம்பந்தமாக தேவைப்படும் டிப்போக்களுக்கு வழங்குவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையின் ஏகல பிரதான களஞ்சியத்தில் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொண்ட பொருள் மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் 50 | அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை போக்குவரத்தச் சபையின் அனைத்து டிப்போக்களுக்கும் | இருப்பு விடயங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து இருப்பிற்கு எடுத:துக்கொள்வதற் |

| | | | |
|---|---|---|---|
| | வகையான உதிரிப்பாகங்கள் தொடர்பாக ரூபா 7,186,995 பெறுமதியினைக் கொண்ட 10,039 உதிரிப் பாகங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையிலுள்ள பொருட்கள் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெரியப்படுத்தியிருந்ததான து அந்த ஆவணங்களில் அடங்கியுள்ள பொருட்களில் டிப்போக்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் இருக்குமாயின் உதிரிப்பாகங்களை உரிய டிப்போக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்பதாகும். | கும் பயன்படுத்தாத இருப்புக்கள் சம்பந்தமாக தேவைப்படும் டிப்போக்களுக்கு வழங்குவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மெதுவாக அசையும் இருப்பு விடயங்களான லேலன்ட் 400 Injecter Pump Repair Kit அவைகளின் 504 மீதி 2011 நவம்பர் 28 ஆந் திகதி களஞ்சியத்தில் காணப்பட்டிருந்தும் 2011 நவம்பர் 22 ஆந் திகதி ஸ்டீல் இம்பெக்ஸ் என்ட் இன்டஸ்ரீஸ் கம்பனியிடமிருந்து ஒன்று ரூபா 15,273.44 வீதம் 600 ரிபயார் கிட்டுக்கள் ரூபா 9,164,064 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த இருப்பில் 2022 திசெம்பர் 20 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி 267 ரிபயார் கிட்டுக்களாக இருந்ததுடன் அத்திகதியின் பின்னர் அதாவது 2024 சனவரி 30 ஆந் திகதி வரை எந்த ரிபயார் கிட் தொகுதியும் வழங்கப்படவில்லை. கொள்வனவு செய்யப்பட்ட ரிபயார் கிட்டுக்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற பொருட்கள் என காட்டுவதற்காக பிராந்திய வேலைதளங்கள் மற்றும் டிப்போக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த இருப்பு தொடர்பாக கணக்காய்வினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களுக்கு இணங்க ஜின்தோட்ட வேலைதளத்தில் மாத்திரம் ரூபா 870,856 பெறுமதியான பயன்பாட்டிற்கு எடுத்துதக்கொள்ளப்படாத 57 ரிபயார் கிட்கள் இருந்தது என அவதானிக்கப்பட்டது. இந்த பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள இருப்பு விடயங்களின் பெறுமதி | உடன்படிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு 2021-11-22 ஆந் திகதி ஸ்டீல் இம்பெக்ஸ் என்ட் இன்டஸ்ரீஸ் கம்பனியிடமிருந்து ஒன்று ரூபா 15,273.44 வீதம் 600 ரிபயார் சீட்டுகள் ரூபா 9,164,064 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இக்கணக்கு காலப்பகுதியில் ஸ்டீல் இம்பெக்ஸ் என்ட் இன்டஸ்ரீஸ் கம்பனியிடம் எந்தக் கட்டளையும் மேற்கொள்ளப்படவில்லை. | திகதி 2011/11/22 ஆக திருத்தப்பட வேண்எடியதுடன் இருப்பு விடயங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து இருப்புக்கு எடுத்துக் கொள்வதற்கும் பயன்படுத்தப்படாத இருப்புக்களை தேவைப்படும் டிப்போக்களுக்கு வழங்குவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 4,948,595 ஆகும். | | |
| (ஊ) | சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய சொத்துக்கள் பட்டோலையில் 49 சந்தர்ப்பங்களின் போது உள்ளடக்கப்பட்ட ரூபா 26,344,359 பெறுதியுடனான சொத்துக்கள் உறுதியாக இனங்காணபட்டிருக்காததுடன் அவற்றினை சரியாக இனங்கண்டு சொத்துக்கள் தவறான பயன்பாட்டிற்கு உட்படுவதற்கான வாய்ப்பினைத் தடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து சொத்துக்களையும் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கும் போது சரியாக இனங்கண்டு உரிய தகவல்களை அதில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 3.8 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அவிசாவளை டிப்போவின் பஸ்களை திருத்தம் செய்யும் நடவடிக்கைக்காக 2023 யூன், யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 10,582,494 செலவு செய்யப்பட்டிருந்தது. உள்நாட்டு அவசர கொள்வனவிற்காக டிபோ முகாமைத்துவத்திற்கு ரூபா 50,000 உசச அளவிற்கு உட்பகட்டு உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு முற்பண எல்லை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த எல்லை எந்த உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக எவ்வளவு காலத்திற்கு மற்றும் நாட்களுக்கு என்பது குறிப்பிடப்பட்டிருக்காததன் காரணமாக ஒரு கொடுப்பனவு வவுச்சர் ரூபா 50,000 எல்லைக்கு உட்பட்டு கொடுப்பனவு வவுச்சரினை சமர்ப்பித்து 2023 யூன் 02 ஆந் திகதி மாத்திரம் ரூபா 691,470 பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய போட்டி கேள்வி மனுவினூடாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தலும் சந்தை விலை | இலங்கை போக்குவரத:து சபையினால் தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய போட்டி கேள்விமனுக் கோரல் முறைமையின் கீழ் அந்த ஆண்டு தொடர்பாக பொறியியல் பிரிவின் மூலம் இனங்காணப்பட்ட தேவைப்பாட்டிற்காக அந்த ஆண்டு தொடர்பாக அங்கீகரித்த பெறுகைத் திட்டத்திற்கு இணங்க பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அங்கீகரித்த பெறுகையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருட்களானது அப்பொருட்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனத்தின் விலைகள் மற்றும் பெறுகை செல்லுபடியாகும் கால எல்லையானது அனைத்து பிராந்திய பொறியிலாளர்களுக்கும் பிராந்திய நிதி முகாமையாளர்களுக்கும் தலைமை அலுவலகத்தின் கேள்விப் பிரிவின் மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் அதற்கு இணங்க கொள்வனவு செய்தல் | இது தொடர்பாக பரீட்சித்துப்பார்த்து இவ்வாறான ஒழுங்கீனங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்பினையும் துஸ்பிரயோகத்தினை தவிர்த்துக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையின் கீழ் அவசர கொள்வனவாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 2023 யூன் யூலை மாதங்களில் ஹினோ பஸ்களுக்குத் தேவையான சந்தையில் ஒன்று ரூபா 75,000 பெறுமதியான டேர்போ சார்ஜ் ஒன்று ரூபா 120,000 வீதம் ரூபா 360,000 இற்கு 03 டோபோ சார்ஜ்கள் ரூபா 135,000 மிகையாகச் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | சிவில் பொறியியல் பிரவினால் தலைமை அலுவலகத்திலுள்ள நடமாடும் பரீட்சிப்பு பிரிவில் 1,410 சதுர அடி தளத்திற்கு டைல் பதிப்பதனை உள்ளடக்கிய சிவில் வேலைகள் ரூபா 2,166,308 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தததுடன் அதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் மூலப்பொட்களானது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பிரிவிற்கு இணங்க விலைத்தொடர்பு முறைமையின் கீழ் விலைமனுக்களை கோரி கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் போலியான விலைக்கோரலின் மூலம் ரூபா 873,563 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக்கொள்ளவிற்குள் உள்ளடக்கப்பட்ட 08 பொருள் விடயங்களின் சந்தை விலைகளானது தலைமை அலுவலகத்திற்கு அருகாமையிலுள்ள வழங்குனர்களிடமிருந்து குறைந்த விலைக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தும் பிலியந்தல பிரதேசத்திலிருந்து உரிய பொருட்களை கொள்வனவு செய்து அத்திரவியங்கள் மற்றும் பொருட்களுக்காக ரூபா 302,940 பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க சபைக்கு ரூபா 302,940 நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான சிவில் பொறியியல் செயற்பாட்டிற்காக 08 நிறுவனங்கள் பதிவு டிசெய்யப்பட்டுள்ளன. காட்டப்பட்டுள்ள பொறியியல் செயற்பாடுகளுக்காக மேற்கூறிய வழங்குனர்களிடமிருந்து விலை கோரல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றிற்கு மத்தியில் அனைத்து விடயங்களும் பூரணமான ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்துள்ள வழங்குனராக பிலியந்தலை பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நிறுவனமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | விலைத் தொடர்பு முறைமையின் கீழ் கொள்வனவு மேற்கொள்ளும் போது அது தொடர்பாக அறிவுபூர்வமாக நடவடிக்கை எடுத்து அவ்வாறான நட்டம் ஏற்படுவது தவிர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 ஆம் ஆண்டில் வாகன அணியை ஓடும் நிலையில் பேணுவதற்குத் வேையான புதிய டயர்களைக் கொள்வனவு செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்விகள் தொழில்நுட்ப பொருள் விபரக்கூற்றிற்கு இணங்கியுள்ளது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்திருந்தும் அமைச்ரவை பெறுகைக் குழுவின் மூலம் வழங்கிய சிபாரிசின் அடிப்படையில் உரிய கம்பனிக்கு கேள்வியினை வழங்குவதற்கு முன்னர் அதாவது 2023 யூலை 10 ஆந் திகதி 2660 புதிய டயர்கனளுக்கு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. கட்டளைக்கு இணங்க பெற்றுக்கொள்ளப்பட்ட டயர்கள் தொழில்நுட்ப ரீதியாக பொருத்தமற்றது என டயர்களை பரீட்சிப்பிற்கு உட்படுத்திய உத்தியோகத்தர்களால் தெரிவித்து நிராகரிக்கப்பட்டிருந்தும் அவை பயன்படுத்துவதற்காக டிப்போக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் உரிய வழங்குனருக்கு மேற்கூறிய கேள்வி வழங்கப்பட்டிரந்ததுடன் மேற்கூறிய கம்பனியிடமிருந்து ரூபா 355,725,222 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 5,842 புதிய டயர்கள் 2024 சனவரி 31 ஆந் திகதியளவில் ஏசுல களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தன. இந்த டயர் இருப்பிலிருந்து 2023 ஆம் ஆண்டின் போது கம்பஹா பிராந்தியத்திற்கு வழங்கப்பட்டிருந்த டயர்களின் அளவு 516 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 2,618,313 பெறுமதியுடனான 43 டயர்கள் அதாவது 08 சதவீதம் உரிய காலத்திற்குள் வெற்றியளிக்காதிருந்தமையால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | டயர்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரும் போது கேள்விப் பத்திரத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்புக்களும் தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் வழங்கியிருந்த பொருள் விபரக் குறிப்புக்களும் எவ்வளவு தூரத்திற்கு பொருந்துகின்றது என்பதனைப் பார்த்து எழுத்துமூல தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு Ferentino Tyre கம்பனியின் டயர்களை கொள்வனவு செய்தல் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் சபையின் நடைமுறைக்கு இணங்க பௌதீக பரீட்சிப்பினை மேற்கொண்டு பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்கியதான டயர்கள் மாத்திரம் பொறுப்பேற்றல் இடம்பெறுகின்றது. | கொள்வனவு செய்தலினை மேற்கொள்ளும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கிணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்படுகின்ற டயர்கள் தொழில்நுட்ப ரீதியாக பொருத்தமானது என பரீட்சித்து பயன்பாட்டிற்கு விடுவிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையின் வாகன அணிக்காக 2023 ஆம் ஆண்டிற்குத் தேவையான சிறீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணை வகைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,283 மில்லியன் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கான பெறுகை நடைமுறைகள் 2022 ஒக்தோபர் 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 மே 23 ஆந் திகதியளவில் கேள்வியினை வழங்கி கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் 04 மாதங்களுக்குத் தேவையான கிரீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணையை மாத்திரம் கொள்வனவு செய்வதற்காக ரூபா 681,999,047 நிதிப் பெறுமதியுடனான கேள்வி 2023 திசெம்பர் 22 ஆந் திகதி வழங்குனருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதாவது நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு 07 மாதங்களுக்கு பின்னராகும். இக்கொள்வனவிற்காக 2022 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானம் எடுத்து பெறுகை நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காமை மற்றும் கேள்வியை தாமதிப்பதன் மூலம் சபைக்கு பஸ் அணியை ஓடும் நிலையில் பேணுவதற்கு மீளாய்வாண்டிற்குத் தேவையான கிரீஸ் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைக்காக ரூபா 1,049,288,879 பணம் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டதுடன் அதன் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பிரிவிற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட:டக் குழு அறிக்கையை 2023-04-10 ஆந் திகதிக்கு மன்னர் வழங்கவதற்கு பெறுகை கால அட்டவணையின் (PTS) நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2023-08-25 ஆந் திகதியே வழங்ககூடியதாக இருந்தது. பின்னர் 2023-10-09 ஆந் திகதி நடைபெற்ற நிரந்தர அமைச்ரவை பெறுகைக்குழு (SCAPC) கூட்டத்தின் போது தொழில்நுட்ப மதிப்பீட:டக் குழுவின் சிபாரிசு அங்கிகரிக்கப்பட்டதுடன் 2023-12-11 ஆந் தகிதி நடைபெற்ற அமைச்ரவை திர்மானத்திற்கு இணங்க 2023-12-22 ஆந் தகிதி உரிய 02 நிறுவனங்களஞ்கக கேள்வி வழங்கப்பட்டது. | பெறுகையானது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கள் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க மேற்கொண்டு கொள்வனவு செய்தலினை துரரிதப்படுத்துவதனூடாக முறையற்ற கொள்வனவுகளை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சபையின் பஸ் அணிக்காக 2023 ஆம் ஆஅண்டிற்குத் தேவையான அசோக் லேலன்ட் செசி உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் அமைச்சரவை பெறுகைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையை 2023-04-10 ஆந் திகதி வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2023-05-08 ஆந் திகதி அமைச்சிற்கு | பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட வேண்டியதுடன் உரிய பெறுகைகளை நிர்ணயிக்கப்பட்ட |

அது 2022 திசெம்பர் 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 மே 03 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டியிருந்தது. அசோக் லேலன்ட் இன்ஜின் மற்றும் கியர்பெட்டி உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தலானது அமைச்சு பெறுகைக் குழுவினூடாக 2022 ஒக்தோபர் 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஏப்ரல் 02 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டியிருந்தது. இக்கொள்வனவினை துரிதப்படுத்துவதற்காக அமைச்சரவையினால் 2022 நவம்பர் 14 ஆந் திகதி கொள்கை ரீதியான தீர்மானம் வழங்கப்பட்டிருந்தும் அசோக் லேலன்ட் செஸி உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் கேள்வியை வழங்குதல் 03 மாதங்கள் 16 நாட்கள் தாமதடைந்திருந்ததுடன் அசோக் லேலன்ட் இன்ஜின் மற்றும் கியர் பெட்டிகளை கொள்னவு செய்யும் கேள்வி 08 மாதங்களும் 03 நாட்களும் தாமதித்து வழங்கப்பட்டிருந்தது. அசோக் லேலன்ட் இன்ஜின் மற்றும் கியர் பெட்டி உதிரிப்பாகங்களின் 533 விடயங்களுக்காக கிடைத்திருந்த கேள்விக்காக தெரிவுசெய்த 07 கேள்விதாரர்களுக்கு அவற்றில் 168 விடயங்களுக்காக பெறுகை மேற்கொள்வதற்கும் மீண்டும் விலை மனுக் கோராது மிகுதி 365 விடயங்களுக்காக 2006 பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட வேண்டுமெனவும் கேள்விச் சபை திர்மானித்திருந்தது. அசோக் லேலன்ட் உதிரிப் பாகங்கள் 240 இன் வருடாந்த தேவைப்பாடு 74256 ஆக இருந்ததுடன் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட அளவில் 04 மாத தேவைப்பாடான 24,752 விடயங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ருந்த கேள்வியின் பிரகாரம் 180 உதிரிப்பாகங்களுக்காக 05 கேள்விதாரர்களுக்கு ரூபா 88,099,744 தொகைக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. 2023-05-16 ஆந் திகதி நடைபெற்ற SCAPC குழுக் கூட்டத்தின் போது TEC இன் மூலம் சிபாரிசு செய்த சகல வகையிலும் பூரணத்துவமான ஆகக் குறைந்த கேள்வியை சமர்ப்பித்த 05 நிறுவனங்களுக்கு பெறுகையை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க வழங்குதல் கடிதம் 2023-09-15 ஆந் திகதி அந்த 05 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023-09-06 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சு பெறுகைக்குழு (MPC) கூட்டத்தின் போது TEC மூலம் சிபாரிசு செய்த பூரணத்துவமான ஆகக் குறைந்த கேள்வியை சமர்ப்பித்த 06 நிறுவனங்களுக்கு பெறுகையை வழங்குதல் திர்மானிக்கப்பட்டது. 2023-12-05 ஆந் திகதி இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க வழங்குதல் கடிதம் 2023-12-14 ஆந் திகதி அந்த 06 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

காலத்திற்குள் பூர்த்தி செய்து உதிரிப்பாகங்களின் பற்றாக்குறையினை இல்லாமல் செய்து பஸ்கள் நிர்ணயிக்கப்பட்டவாறு ஓடுவதற்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான உதவியை வழங்குதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 60 விடயங்களுக்காக விளக்கம் இல்லாததனால் அந்த விடயங்கள் 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 இற்கான பிற்சேர்க்கை 35 ஆக வழங்கப்பட்டிருந்த 2020 மார்ச் 25 ஆந் திகதிய பணிப்புரையின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டுமென கேள்விச் சபையினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2023 ஆம் ஆண்டின் போது இந்த இரண்டு கேள்விகளையும் வழங்குவதன் மூலம் எந்த உதிரிப்பாகமும் கிடைத்திருக்காததுடன் கட்டுப்பாட்டுக் கணக்கு W-5 இன் கீழ் டிப்போ மற்றும் பிராந்திய அலுவலகங்களின் மூலம் விலைத் தொடர்பு முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப்பாகங்களுக்காக மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 2,032,617,464 ஆக இருந்தது. | | |

## 3.9 ளிப்படையான நிதிசார் ஒழுங்கினங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டது எனக் குறிப்பிட்டு நாடு முழுவதும் பயணம் செய்யக்கூடிய ரூபா 1,247,739 பெறுமதியினைக் கொண்ட 04 பயண அனுமதிப்பத்திரங்கள் 2023 யூன் 01 ஆந் திகதி அச்சிடப்பட்டிருந்த போதிலும் அந்த பயண அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள், பணம் செலுத்தும் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் அந்த அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்காக பெற்றுக்கொண்ட அங்கீகாரம் மற்றும் அந்த அனுமதிப் பத்திரங்கள் உரிய தொழிற்சங்கத்தினால் பெற்றுக்கொண்டதற்கான உறுதிப்படுத்தல் ஆவணங்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கிணங்க அப்பயண | பதில் வழங்கப்படவில்லை. | பரீட்சித்துப் பார்த்து உரிய பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பத்திரங்கள் தவறான பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படவில்லை என திருப்தி கொள்வதற்குத் தேவையான தவகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | எரிபொருள் சிக்கல் காணப்பட்ட காலத்தில் அக்குரஸ்ஸ டிப்போவின் மூலம் இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவருக்கு மு.10 இலக்கம் 015287 006473 மற்றும் 006419 என்பவற்றின் மூலம் உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லாத ஏனைய வாகனத்திற்கு முறையே எரிபொருள் லீற்றர் 400, 620 மற்றும் 476 ஆக மொத்தமாக 1496 லீற்றர்கள் 03 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த எரிபொருள் தலைவருக்கு வழங்கப்பட்டது என எரிபொருள் நிரப்பு நிலையத்தில் (ER-08) குறிப்பிட்டிருந்தது. அதற்கிணங்க இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவருக்கு வழங்கப்பட்ட ரூபா 620,840 பெறுமதியான 1496 லீற்றர் எரிபொருள் பிழையான பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என திருப்திகொள்வதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இதில் குறிப்பிட்டப்பட்டுள்ளவாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவருக்கு எரிபொருள் வழங்கப்பட்டது. அவ்வாறு எரிபொருள் வழங்கப்பட்டதானது இதில் காட்டப்பட்டுள்ளவாறு பணம் அறவிடப்பட்டேயாகும். | இது தொடர்பாகப் பரீட்சித்து ஏற்பட்ட நட்டத்தினை அறவீடு செய்வதற்கும் தொடர்புபட்ட தரப்பின்ர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.10 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க மற்றும் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் ஆரம்ப மட்டத்திலுள்ள உயர் பதவியான I ஆம் தரத்திலிருந்து VII A தரம் வரையான தரங்களில் செயற்படுகின்ற ஆளணியினருக்காக ஆட்சேர்த்தல் மற்றும் | ஆரம்ப தரத்தின் உயர் உத்தியோகத்ரத்களுக்கு (I ஆம் தரத்திலிருந்து VIII B தரம் வரை) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் DMS/1622/Vol-III ஆம் இலக்க... 2022-09-28 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 02/2016 ஆம் இலக்க ஒழுங்குவிதியின் பிரகாரம் புதிய சம்பள | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு உள்ளீர்க்கப்பட்டு சரியாக சம்பளம் செலுத்தப்பட வேண்டியதுடன் மிகையாக செலுத்திய சம்பளத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியுயர்த்:துதல் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஆளணியினர் உரிய பதவிகளுக்கு உள்வாங்கப்படாது 2016 ஆம் ஆண்டிலிருந்து அவர்களுக்கு சம்பளமும் படியும் செலுத்தப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் போது மாத்திரம் மேற்கூறிய ஆணியினருக்கு சம்பளமும் படியுமாக ரூபா 1,589,164,734 தொகை பிழையாக செலுத்தப்பட்டிருந்தது. | கட்டமைப்பினை சிபாரிசு செய்தல் என்ற தலைப்பில் வழங்கப்பட்ட கடிதத்தினை அடிப்டையாகக் கொண்டு 2023-03-01 ஆந் திகதியிலிருந்து ஆளணியினரின் சம்பளம் பரிமாற்றம் செய்யப்பட்டது. மேலும் ஆளணியினருக்கான ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை 2024-02-14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது. மேலும் 2023-03-01 ஆந் திகதியிலிருந்து இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆளணியினரீன் சம்பளத்தை பரிமாற்றம் செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டது எனவும் எக்கொடுப்பனவும் பிழையாக கொடுப்பனவு செய்யப்படவில்லை எனவும் குறிப்பிடுகிறேன். | |
| (ஆ) | சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் மேலதிக நேர வேலை செலவுகளைத் தவிர்த்து அலுவலக மற்றும் ஏனைய வேலைத் தளங்களின் ஆளணியினரின் மீளாய்வாண்டிற்கான மேலதிக நேர வேலைச் செலவுகள் ரூபா 896 மில்லியனாக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் மேலதிக நேர வேலைக் செலவான ரூபா 671 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மேலதிக நேர வேலைச் செலவு ரூபா 225 மில்லியன் அதாவது 33 சதவீத்தால் அதிகரித்திருந்தது. உரிய ஊழியர்களுக்கு வழக்கமான கடமை நேரங்களின் போது நிறைவேற்றவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக கடமைப்பட்டியல் வழங்கப்படாமை, விரல் அடையாளமிடும் | 2022 ஆம் ஆண்டினை விட 2023 ஆம் ஆண்டில் அண்ணளவாக 33% அளவில் மேலதிக நேர வேலைப் படி அதிகரித்தமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இலங்கை போக்குவரத்துச் சபையின் மேலதிக நேர வேலைப்படியானது ஆவணப்படுத்தப்பட்டவை மற்றும் ஆவணப்படுத்தப்படாதவை என்பதாக இரண்டு பகுதிகளாக வழங்கப்படுகின்றது. இதன் போது விசேடமாக ஆவணப்படுத்தப்பட்ட மேலதிக நேர வேலைப்படியினை கட்டுப்படுத்த முடியாததாகும். | சுயகட்டுப்பாட்டு முறைமையினூடாக மேலதிக நேர வேலைப் படியினைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மற்றும் மேலதிக நேர வேலையினை கண்காணிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இயந்திரங்களினூடாக வருகைதருதல் மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்தி அதற்கிணங்க மேலதிக நேர வேலைப்டி கணிப்பீடு செய்யப்படாமை, கட்டுப்பாடின்றி தொடர்சிசயாக இரவு பகல் தொடர்ச்சியாக இரண்டு நாட்களுக்கு மேற்பட்ட காலம் கடமையில் ஈடுபட்டுள்ளமை என்பன வழக்கத்திற்கு மாற்றமாக மேலலதிக நேர வேலைப்படி அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | | |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவிற்கு இணங்க 2023 ஆம் ஆண்டிற்கான சபையின் ஆண்டறிக்கையின் வரைபு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆண்டறிக்கை வரைபாக்கப்பட்டு வருவதுடன் வரைபாக்கி முடிவடைந்த உடன் அது தொடர்பான வரைபு உங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கிறேன். | ஆண்டறிக்கையினை துரிதமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை சபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கும் வருடாந்த பாதீட்டிற்கும் தொடர்புபட்டதாக முன் அறிந்துகொள்ளப்பட்டு அடுத்துவரும் 05 ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட வேண்டிய தந்திரோபாயத் திட்டம் சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை போக்குவரத்துச் சபையினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், வருடாந்த பாதீடு என்பன தயாரிக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம், பாதீடு மற்றும் தந்திரோபாய திட்டம் என்பன தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**4.3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் | பாதீடு செய்யப்பட்ட வருமான செலவு கூற்றும் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவுகள் | சுற்றறிக்கைக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| பிரிவு செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது பாதீடு செய்யப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்று, பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை, பாதீடு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று, பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவுகள் என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 இன் பிரதான பெறுகைத் திட்டத்திற்கு இணங்க ரூபா 134,341 பெறுமதியான 53 பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 74,662 மில்லியன் பெறுமதியான 11 பெறுகை நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட பெறுகைச் செலவுகளில் 44.42 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளதனால் பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சில பெறுகைகள் சிறிய அளவிலான பெறுகைக்குழு விற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சந்தை விலைகளை கவனித்துப்பார்க்கும் போது மிகவும் உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்ததனால் பெறுகைக்குழுவினால் உரிய பெறுகைகளுக்காக மீண்டும் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. | வருடாந்த பெறுகைத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிரு க்காததுடன் பாதீட்டினைத் தயாரிக்கும் போது அறிவுபூர்வமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.5 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அந்த நிகழ்ச்சி நிரலினை அமுல்படுத்துவதற்குரியதான குறிக்கோள்களை இனங்கண்டு அதற்காக தேவையான வளங்களையும் இயலளவினையும் பாதுகாப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனைப் பரீட்சிப்பதற்காக சபையினால் பயன்படுத்துகின்ற செயலாற்றல் குறிகாட்டி (KPI) என்ன என்பது இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சபையினால் இனங்காணப்பட்ட செயலாற்றல் குறிக்காட்டியினை (KPI) தயாரித்து அதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படு தல் வேண்டும். |